பதிவு எண் 2041 **KUDI ARASU.** தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0 | வாரப்பதிப்பு. | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. |
|---|---|---|
| 6 மாத சந்தா ,, ... ரூ 1-12 | ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி, | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| வெளிநாட்டிற்கு ,, ... ரூ 4—0 | | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு ஆவணி மீ 18 உ. (2—9—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 19



:: ரஸ்டன் ஹெலிகல் ::

சென்ட்ரிப்யூகல் பம்புகள்

விவசாயத்துக்கு இன்றியமையாதது.
நிமிஷம் 1க்கு 100 முதல் 4800 காலன் வரை
80 அடி உயரத்திற்கு தண்ணீர்
எடுக்கக்கூடியது.
கோயமுத்தூரில் தயாரில் இருக்கின்றன.

- ரஸ்டன்-ஹார்ன்ஸ்பி. -

க்ரூட் ஆயில் இன்ஜின்களும் தயாரில்
இருக்கின்றன.

MASSEY & Co. Ltd.
ENGINEERS

மாசி அண்ட் கம்பெனி, Ltd.
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்
கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர்வற்ற ரூபலாவண்யமும் பலவிதமான சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரு 2-12-0

பி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.



## "குடி அரசு"

அரசியலின் போராலும், மதத்தின் போராலும், பார்ப்பனர்களும், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் பாமரமக்களை ஏமாற்றி வஞ்சிப்பதைக் குறித்தும், "இந்து" மத ஆபாசங்களாகிய வேதம், சாஸ்திரம், புராணம் முதலியவைகளின் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக எழுதி வைத்துக்கொண்டிருக்கும் பித்தலாட்டங்களைக் குறித்தும் அஞ்சாது தைரியமாய் உண்மையை வெளியிட்டு பாமர மக்களைத் தட்டி எழுப்பி எல்லோரும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடையச் செய்யும் தமிழ் வாரப் பத்திரிகை 'குடி அரசு' ஒன்றே.

16 முதல் 24 பக்கங்கள்வரை கொண்டது.
7000 சந்தாதாரர்களையுடையது.
50000-க்கு மேற்பட்ட
வாசகர்களை உடையது.

**வருட சந்தா ரூ. 3 தான்.**

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

## 'REVOLT'

"குடி அரசின் கொள்கையைக் கொண்டு வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.
ஆசிரியர்:- "குடி அரசு" & "ரிவோல்ட்,"
ஈரோடு.

## 'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—6 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,,18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

காரம், மணம், நிறம், குணம், வாடை உள்ளது

சுமார் 80 வருஷங்களுக்குமுன் மதராசில் முதல் முதல் தோன்றி உலகமெங்கும் புகழ்பெற்றுலவும் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும், சுறுசுறுப்பையும் தருவது அசல் ஷண்முகம் பொடியே.

80 வருஷ காலமாக சென்னையிலேயே சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிரா

80 ௵ காலமாக உலக பிரசித்திபெற்ற

**அசல்**

**ஷண்முகம்**

**பட்டணம்பொடி**

அநேக மெடல்கள், நற்சாட்சிபத்திரங்கள் பெற்றது.

மம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்போல் வாடை, அசல் பசும் நெய்மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப் பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியைவாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

உலகமார்க் s u r ; a வ ங்கவும்.

அசல் ஷண்முகம் பட்டணம் போடி விலை ஜாப்தா. முதல் தரம் வீசை ரூ. 4 4 0 இரண்டாந்தரம் ஒரு வீசை 3 4 0.

## டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்

இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல் உள்பட கண்டத்திற்கு மேல் 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது.

| | விலை | தபால்செலவு. | பாக்கிங். | தொகை |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |

24 துலா டின் ரூ. 1 9 0 12 துலா டின் அ 14

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற அசல் ஷண்முகம் பட்டணம் பொடி 4 பலங்களும், டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1 புட்டியும் தபால் ஜார்ஜ் உள்பட 1 ரூபாய்க்கே வி. பி. மூலமாக அனுப்பப்படும். ஏஜண்டுகள் தேவை.

**ஷண்முகம்மூக்குத்தூள் கம்பெனி Ltd., போஸ்ட் பாக்ஸ் 140, மதராஸ்.**



## காலரா.

கொடியதும், மிகப் பயங்கரமானதுமான இந்த நோய் உங்கள் ஜில்லாவிலாவது, தாலூக்காவிலாவது, கிராமத்திலாவது பரவுமுன்—நீங்கள் முன் ஜாக்கிரதையாயிருங்கள்! காலராவைத் தடுப்பதற்காயினும் சரி, அல்லது குணப்படுத்துவதற்காயினும் சரி, வைத்ய ரத்ன கோபாலாச்சார்லு அவர்களின்

**கற்பூராதிரிஷ்டம்**

**&**

**விஷீசிசஞ்சீவினிவடி**

என்ற மருந்துகளுக்கு இணையானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியதவசியம்.

**விலை செட் 1-க்கு ரூ. 1-2-0.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**

**151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி,**

**தபால் பெட்டி 287, சென்னை.**



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

**CANADIAN WATCH PEOPLE**
George Town, Madras.



**மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்**

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

**மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,**

மைலாப்பூர், மதராஸ்.

## பண்டிதர்களின்
## கொடுஞ்சொல்லை மறந்தாலும்
## அவர்களின்
# குறுகிய புத்தியை
## நீட்டித்தானே ஆகவேண்டும்

———

கைவல்ய சாமியார் எழுதுவது.

உலகில் பல்வேறு பாகங்களிலுள்ள ஆடம்பரங்களையும் சுகங்களையும் ஆகருஷிப்பதற்காக மேல்நாட்டினர் புதிய புதிய உபாயங்களையும் வழிகளையும் கண்டு பிடித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நாமோ பிடிவாதமாக ஒரே பாதையில் நடந்து கொண்டிருக்கிறோம். நூதனமாகவும் புதிதாகவும் எதாவதொன்றைக் கண்டு பிடிப்பதற்கு நாம் சிறிதும் முயற்சி செய்வதே இல்லை. நூதன சக்தி என்பது எவ்விதமாகவோ நம்மிடத்தினின்றும் போயே விட்டது. மறுபடியும் அது நம்மை வந்து அண்டுவதற்கு நடுங்குகிறது. நம் ஜனசமூகம் முழுதும் ஆகாரத்திற்காக அழுது கொண்டும் பட்டினியால் மரித்துக் கொண்டும் இருக்கிறதை நாம் நன்றாய் அறிந்திருந்தும் இந்தக் கஷ்டத்தினின்றும் நிவர்த்தியடைவதற்குள்ள மார்க்கம் எதையேனும் கண்டு பிடிப்பதற்கு நாம் சற்றும் யோசிப்பதேயில்லை. மூலையிலிருந்து வெளியே வந்து உலகமானது எப்படி சலிக்கின்றது என்பதை பார்ப்பதுமில்லை; பயத்தை ஒழித்து அறிவுக்கதவை சற்று திறந்துகொடுத்தால் ஆலோசனா சக்தி தானே உண்டாகுமென்பதை உணர்வதுமில்லை. இந்நிலைமையிலிருக்கும் நாம் நம் அறிவுகளையெல்லாம் புராண தர்க்கத்திலேயே செலவழிப்பது வீணல்லவா என்பது வாசகர்களுக்கு தோன்றாமலிருக்க ஞாயமில்லை.

ஆனால் நம் ஜனங்கள் கண்ணைத்திறந்திருத்தல் தூங்குதல் உண்ணுதல் குடித்தல் கலியாணம் பண்ணுதல் பாடை எடுத்தல் முதலிய ஸகல காரியங்களையும் பிறருடைய ஆணையின்படியே செய்து வழக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்கங்களெல்லாம் மூட நம்பிக்கையின் தொகுதிகளாகவும் அதுவே மதமாகவும் உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மதமே கடவுளென்றும் அதையே நம் பெரியவர்கள் நமக்காக கடவுளிடம் பேசி உத்தரவு பெற்றிருக்கிறார்களென்றும் பண்டிதர்கள் நினைத்துக் கொண்டு அற்பத்தனமான பயத்தையும் தன்னலம் வேண்டல் என்னும் குணத்தின் குருட்டசத்தால் மானுஷீக உரிமைகளைப் புறக்கணித்த கொடுமைகளையும் விடமாட்டோம் என்கிறார்கள். இதற்கு இவர்களுக்கு பிரமாணமாக எது விருக்கிறதோ அதிலிருந்தே நாங்களும் இவர்களின் குறுகிய புத்திக்கு பிரமாணம் காட்ட வேண்டியிருக்கிறது. இவர்களின் குறுகிய புத்தி வியாபக மடையாவிட்டாலும் இவர்களில் சேர்ந்த சிலரும் இனி வரும் பண்டிதர்களும் எங்கள் தர்க்கத்தால் சனசமூகங்களுக்கு நன்மையுண்டு பண்ணுகிறவர்களாக ஆவார்கள் என்பது உறுதி. மற்றும் பண்டிதர்களைப் பார்த்து நாங்கள் "அய்யா பண்டிதர்களே! தெய்வத்தின் விதியை மாற்றமுடியாது; அது எங்கும் எப்போதும் இசையும்; இதை நமது முன்னோர் கண்டிருந்தனர்" என்பதெல்லாம் சரியே அந்த விதி நித்தியமானது க்ஷணிகம் அன்று என்பது மிருக்கட்டும்; அந்த விதிக்கு பூசை நைவேத்தியம் அபிஷேக ஆராதனை பொங்கல்சோறு, குருக்கள் கும்பிடு, புரோகித தக்ஷணை, பூசாரிவரி, திருப்பல்லாண்டு, திருமுறை பாராயணம், இத்தனையும் செய்து இதுவரையிலும் அடைந்த பலனில்லையே. ஆதலால் அந்த நித்தியமான விதியை நம் அறிவால் கண்டு செய்கையில் பயன்படுத்தலாம். எத்தனைக்கெத்தனை அந்த விதியை நாம் ஸ்வீகரிக்கிறோமோ அத்தனைக்கத்தனை நமது பாதையில் உள்ள தடைகள் விலகும். இந்த விதியின் ஞானமே இயற்கைநூல் (ஸயன்ஸ்) என்று சொல்லப்படும். இயற்கை நூல் வழியாலன்றோ ஐரோப்பா தற்காலத்தில் பூமியில் விஷக்காய்ச்சல் இல்லாமல் செய்து விடுவேன் மனிதர்களின் வீடுகளில் சோற்றுப் பஞ்சமும் கல்விப்பஞ்சமும் இல்லாமல் செய்துவிடுவேன். ராஜ்யத்தின் பொதுநன்மைக்கும் தனிமனுஷனுடைய ஸ்வதந்திரத்திற்கும் முரண்படாமல் செய்வேன் என்று துணிவுடன் கூறுகிறது" என்று சொல்லுவதினாலேயே எங்கள் மீது "சைவத்தைக் குற்றம் சொல்லுகிறார்கள் சைவசமய ஆசாரிகளை இகழ்கிறார்கள்" என்று பழி சுமத்தி "குடி அரசு" பத்திரிகையைத்துலைத்து பத்திராசிரியரையும அவர்கள் கூட்டத்தார்களையும் ஒழிக்கவேண்டும்" என்று சொல்லும் பண்டிதர்களின் தொல்லைக்கு நாங்கள் பயப்படுவதானால் எங்கள்காரியம் எப்படி கைகூடும். வேண்டுமானால் அப்பண்டிதர்களின் கொடுமையானவார்த்தைகளை நாங்கள் மறந்துவிடலாம். ஆனால் அவர்களுடைய கோபத்திற்கும் குறுகியபுத்திக்கும் எதாவது சமாதானம் சொல்லித்தீரவேண்டியது அவசியமல்லவா? எங்கள் பத்திராதிபர்தானே அப்பண்டிதக்கூட்டத்தாருக்கு தனித்தனியாக பதில்சொல்ல ஏற்றுக்கொண்டிருப்பதாலும் தவறுதல்யாருக்கும் உண்டு என்றும் அதிலும் ஆத்திரத்தாலுண்டாகும் பற்றுதலில் அறிவுகெடுவதும் சகஜமென்றும் நினைத்து நான் அப்பண்டிதர்களுக்கு பொதுப்படமேல்வாரியாக பதில்எழுதிக்கொண்டு வருகிறேன்.

கண்ணாடி மூடிக்குள்ளே தண்ணீர் விட்டு அதில் வளர்க்கப்பட்ட பொன்னிறமீன்கள் கண்ணாடியைத் தண்ணீர் என்று நினைத்து அதில்வந்து மோதிக்கொள்ளும். அதைப்பிறகு பெரியதொட்டியில் கொண்டுபோட்டாலும் தண்ணீரை கண்ணாடிஎன்று நினைத்து பயந்து பழையமூடி யெல்லைக்குள்ளே சுற்றுமாம். அதுபோலவே அறிவுக்கு எவ்வளவு விசாலமான இடம் இருந்தாலும் தலை உடைந்து போமோஎன்கிற புராண பயம் பண்டிதர்கள் எலும்புக்குள் ஊறிக்கிடக்கிறது. அறியாமையால் கிடைக்கட்டும் அறிவினால் விடுதலையும் கைகூடும் என்பதை முன்னோர்கள் அறிவார். தன்னை சர்வத்திலிருந்து பிரிவாகக்காணுதல் அசைவம். உலகமும்தானும் ஒன்றெனக்காண்பதே உண்மைச்சைவத்தின் தன்மை. இத்தனை உண்மைகளைக்கண்டுபிடித்து எழுதப்பட்ட சைவ சித்தாந்தநூல்களை இச்சைவபண்டிதர் படித்தும் அதன் உண்மையை உள்ளவாறு உணராததினால் மேற்சொன்னபடி பொன்னிறமீன்கள் பெரிய தொட்டியிலும் பழையகண்ணாடி எல்லைக்குள்ளே சுற்றுவதுபோல புராணத்தொட்டியிலே சுற்றுகிறார்கள். தன்னிடம் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையுங்காணும் உண்மைச்சைவத்தின் தன்மையானது பண்டிதர்களுக்கு தியாகபுத்தி இல்லாக்குறைவால் தோன்றுவதில்லை. அகந்தைதான் சரீரமுதற்கொண்டு தனதல்லவென்கிற தியாகபுத்திவேண்டும், அதுவே நிரந்தரப்பழக்கமாகவுமிருக்கவேண்டும், உள் விழிப்பார்வை வேண்டும், அந்தர்முக திருஷ்டிவேண்டும். ஆசையெல்லாம் விடவேண்டும், அதுதான் அத்தனைகஷ்டமானதால் நம்பண்டிதர்களுக்கு சுலபத்தில்தோன்றாமல்போனாலும்போகலாம். ஆனால்உலகமுழுவதும் ஆளுகிற பொதுவானலோகவிதி எல்லார்கண்ணுக்கும் முன்னால்நிற்கிறதே இதாவது அவர்கட்குப்படவேண்டாமா? இத்தவிதியை உறுதியான அஸ்திவாரமாகக்கொண்டு ஐரோப்பிய நவீன நாகரீகம் நிலைபெற்றிருக்கிறது. இதில் நம்பிக்கையிருப்பதினால் அதுபெரிய விடுதலைபெற்று முன்னால் நிற்பதை இவர்கள் பார்க்கவில்லையா? நம்புராணங்களும் இதிகாசங்களும் ஏற்பட்டதற்குப்பின் இந்த உலகத்தில் நடந்த மாறுதல்கள் அநேகமென்பதை இப்பண்டிதர்கள் கவனித்தார்களா? கலியுகத்தின் குதிரையாக இருந்த நீராவியை இப்பொழுது மின்சாரசக்திகண்டு நகைக்கிறதை இவர்கள் காணவில்லையா? கண்ணுக்கெட்டாதிருந்த பரமாணு இப்போது மனதுக்கெட்டாதென்ற சித்தாந்தம் உண்டாயிருக்கிறது. மனிதன் பட்சியைபோல இறகுமுளைத்துப்பறக்கிறான். வானத்தின் இடத்தை எல்லாரும் பாகம்போடுகிறார்கள். ஒரேநாள் இரவில் சீனர் பன்றிக்குடுமியை நறுக்கி எறிந்தனர். ஐநூறு வருஷத்தாவுதலை ஜப்பான் ஐம்பதுவருஷத்தில் தாவிவிட்டது. துருக்கி வெள்ளைக்காரத்தொப்பிகளை தன் தொப்பியாக்கிக்கொண்டது. இதையெல்லாம் இப்பண்டிதர்கள் கண்டதும் கேட்டதும் இல்லையா? நாம் நடக்கும் பாதையில்தானே வளைவுதோறும் தடைகள் கட்டுவது இப்பண்டிதர்களின் வாழ்க்கையின் ஒரே தொழிலாகவிருக்கவேண்டும். வீண்கிரிகை சடங்குகளுக்கிடையே நாமும் பண்டிதர்களும் வளர்க்கும் பிள்ளைகள்தானே இவ்வுலக இன்பங்களுக்கு பல்லைக்காட்டி யிரந்து பரிதாபப்படவேண்டும். இவர்களுக்கு ராமா கோவிந்தா சங்கரசம்போ என்று சொல்லுவதற்குமட்டும் கற்றுக்கொடுத்தால் போதுமா? இங்கு வயிற்றுக்குகஞ்சி வார்க்காதகடவுள் பரலோகத்தில் கற்பக விருக்ஷத்தையும் காமதேனுவையும் காட்டுவாரென்பது என்னநிச்சயம். சமையப்பிரசங்கம் செய்யப்போகையிலும்கூட இப்பண்டிதர்கள் இரண்டாவது வகுப்புவண்டிக்கும் வடைபாயச சாப்பாட்டிற்கும் தன்னைக்கூப்பிடவந்தவனின் மடியையும் கையையும் பார்க்கிறார்களேஒழிய அந்த சமையத்தின் பேரிலாவது சம்போ சங்காரஎன்னும் சாமிகள் பேரிலாவது நம்பிக்கையுண்டா?

"குடி அரசு" பத்திராதிபருக்கும் அவரைச்சேர்ந்த சுயமரியாதைச்சங்கத்தவர்களுக்கும் படிப்பில்லை, ஆராய்ச்சியில்லை, என்றும்சொல்லுவதைமாத்திரம் தான் பண்டிதர்கள் "குடி அரசு"க்கு சொல்லும் பதிலாக உபயோகிக்கின்றார்களே ஒழிய பண்டிதர்களுக்கு தங்கள் பெயருக்கேற்ற அறிவு இருக்கிறதா என்பதை பண்டிதர்களின் கோபமும் ஆத்திரமும் காட்டிவிடுவதை அவர்கள் சற்றும் கவனிப்பதில்லை. பண்டிதர்களுடைய படிப்பின் ஆராய்ச்சியும் எங்கள் குடிஅரசின் படிக்காத ஆராய்ச்சியும் பண்டிதர்களின் பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தைக்கும் இந்து சாஸ்திரத்தின் தர்க்க ரீதியோடு "குடி அரசு" பதில் சொல்லிக்கொண்டு வரும்போது உலகம் தானாகவே தெரிந்துகொள்ளும். ஏழை மக்களையும் பாமர மக்களையும் பாழ்படுத்த "குடி அரசு" தோன்றியிருக்கிறதென்கின்றார்கள் சிலர். ஏழை மக்களாகவும் பாமர மக்களாகவும் ஆவதற்குக் காரணமாய் முதலணியில் நிற்கும் வைதீககொடுமையையும், உலக அறிவிலாப் பண்டிதத் திறமையையும், ஆச்சாரி பூச்சாரி என ஆசாடபூதி வேஷம் போட்டு அதில் பங்குபெறும் பக்தகோடிகளையும் பாழ்படுத்தவே "குடி அரசு" தோன்றியிருக்கின்றதேயொழிய ஏழைமக்களையும் பாமர மக்களையும் பாழாக்கத் தோன்றவில்லை. அன்றியும் அவர்களைப் பாழாக்க இப்பண்டிதர்களும் அவர்களது சமய புராண வைதீகக் கொடுமைகளும் இனிப் பாழாகவேண்டியதற்காகஒருசிறிதும் மீதி வைத்திருக்கவுமில்லை. "குடி அரசு" வாராவாரம் எழாயிரம் பிரதிகள் வெளியேபோகின்றன. வாராவாரம் எழாயிரமும் அதற்கு மேற்பட்ட பலஆயிரவர்களும் படிக்கிறார்கள். மண்ணால் சிறு வீடு கட்டி விளையாடிக்கொண்டிருந்த சிறு குழந்தைகளை ஒரு வித்வான்கண்டு "குழந்தைகளே பக்கத்

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# தமிழ் நாடும் அடிமை வாழ்வும்.

## பூர்வகாலம்.

—0—

பண்டிதர். ப. மு. சிதம்பர முத்தரையர் எழுதுவது.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஐவகை நிலவரசர் ஏற்பட்டு தமிழகத்தை ஆண்டு வந்த காலத்தில் புகுந்த பார்ப்பனர் அந்த அரசர்களிடம் பாங்கர்களாக அமர்ந்தனர், அமர்ந்தவர் அவ்வரசர்களுக்கு வரும் நன்மை தீமைகளை நிமித்தங்களால் அறிந்து விலக்கும் மூட நம்பிக்கையைக் கைக்கொண்டு அவர்களைத் தங்கள் வயப்படுத்தியிருந்தனர். தலைவியும் தலைவனும் உடன் போம்போது அவ்விருவரையும் இடை வழியிற் கண்ட செய்தி பற்றிச் செவிலி முதலியோரால் உசாவவும் இறுக்கவும் உரியர்களாய் இருந்து வந்தனர், இவையெல்லாம் தொல்-பொருள்- களவியல், இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், அகநானூறு, கலித்தொகை, முல்லைப்பாட்டு நற்றிணை, கோவை நூல் இவையாதியவற்றில் இலைமறை காய் போல் மறைந்து கிடக்கின்றன. அறிய விரும்புவார் அவற்றை ஆராய்ந்து அறிக. அவ்வாறு அவ்வரசர்களிடம் பாங்கர்களாக அமர்ந்த பார்ப்பனர் படிப்படியாய் தங்கள் வேதப்பேய் வேள்விப்பேய் புரோகிதப்பேய் தலைவிரித்தாடச்செய்து பார்ப்பாரப்பெரும்பேய், எனப்பெயரிய துர்க்காதேவியாகிய தாங்கள் தமிழ் மக்கள் நெற்றிக்கண்ணீர் நிலத்தில் வடிய காட்டையும் மேட்டையும் கரம்பையும் அரும்பாடுபட்டு சீர்திருத்தி பண்படுத்திய பூமி பொன் முதலிய பல பொருள்களையும் பிற்காலத்தில் தானமாகக் கொள்ளை கொள்ளத் தொடங்கினர். அப்பார்ப்பாரப் பெரும் பேய்கள் தமிழ்மக்கள் பொருள்களைக் கொள்ளை கொள்ளத் தொடங்கிய காலத்தில் சேரபாண்டிய சோழர் என்னும் பெயருடன் தமிழகத்தைப் பெருநிலவேந்தர் மரபினர் மூவர் ஆளத் தொடங்கினர். அவ்வேந்தர்களிடம் பார்ப்பனர் மந்திரி, புரோகிதர், புலவர், ஆதியவர்களாய் அமர்ந்து அவர்களைத் தங்கள் வேதப் பேய் வேள்விப் பேய் ஆதியவற்றால் ஆட்டிவைத்து சண்டை சச்சரவுகளை உண்டாக்கி அரசர்களையும் நாட்டையும் சீர்கெடச்செய்து ஜனச் சேதமும் பொருட்சேதமும் நாட்டில் உண்டாக்கித் தங்கள் சமூகத்தினரே மேன்மையடையச் செய்து தமிழ்நாட்டை மூவேந்தர் ஆட்சியினின்று பல்லவருடைய ஏகாதிபத்தியத்திற்குச் செல்லும்படி செய்தனர். இவ்விஷயம் சேர பாண்டிய சோழர் எனப் பெயரிய பெருநில வேந்தரும் வேளிர் முதலிய குறுநிலவரசரும் பிரஜைகளும் பார்ப்பனரும் என்ற தலைப்பின் கீழ் அடியில் விவரிக்கப்படுகிறது.

### சேர பாண்டிய சோழர்; குறுநிலவேந்தர்; பிரஜைகள்; பார்ப்பனர்கள்.

சேரபாண்டிய சோழர் என்ற மூன்று மரபினர் மேல் உரைத்த குறிஞ்சி முதலிய நிலவரசர் வழியினின்று தோன்றி தமிழகத்தின் ஏகாதிபத்தியத்தை அடைந்தனர். அந்த மூவேந்தர் மரபுகள் ஐவகை நிலவரசர் வழியில் வந்தன என்பதற்கு சேரனுக்கு வழங்கும் கொல்லிச்சிலம்பன் என்பதில் குறிஞ்சி நிலவரசனுடைய பட்டமாகிய சிலம்பன் என்பதும் பாண்டியனுக்குக் கூறப்படும் குமரிச் சேர்ப்பன் என்பதில் சேர்ப்பன் என்னும் நெய்தனிலவரசனுடையபட்டமும் சோழனுக்கு வழங்கும் புனனாடன் என்னும் பெயரில் நாடன் என்னும் மருதநில வேந்தன் பட்டமும் நிகண்டு முதலியவற்றில் காணப்படுதலும் பிறவும் சான்றாகும். இம்மூன்று மரபினரும் தமிழகத்தின் ஏகாதிபத்தியத்தை வகித்து வந்தனர். என்பது "பொதுமைச்சுட்டிய மூவருலகு" (புறநானூறு) என்பதால் விளங்கும். அவர்களே முடியுடை வேந்தர்கள். அவர்களுக்குரிய அரச சின்னங்கள் படை கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார் முதலியன. அது "படையும் கொடியும் குடையும் முரசும் நடை நவில் புரவியும் களிறும் தேரும், தாரும் முடியும் நேர்வன பிறவும், தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய" (தொல். பொரு. மரபியல் சூ. 1) என்பதால் பெறப்படும். அம்மூவேந்தர் வழியினருள் பாண்டியர், அகஸ்தியர் முதலிய புலவர் பெருமக்களைக் கொண்டு மதுரையில் ஓர் தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழாராய்ந்து வந்தனர். அவ்வகஸ்தியரை, பார்ப்பனரும், அப்பார்ப்பார சமூகத்தில் தோன்றி சமணரை கொலை செய்வித்த அருளற்ற கொடியோனாகிய சம்பந்தன், கோவில் ஆடு கூத்தியைப் புணர்ந்த ஆரூரன், ராஜத்துரோகி திருவாதவூரன் ஆகிய பார்ப்பனரைத் தங்கள் சைவசமயத்திற்கு ஆசிரியர் எனக் கொண்டாடும் அடிமுட்டாள்களான, வயிற்றுச் சோற்றுக்காக சமயத்தின் பேரால் தமிழர்களுடைய மானத்தைக் கெடுப்பவர்களான, தமிழ் நாடு அடிமை வாழ்விற்குச் சென்றது பார்ப்பார சமூகத்தால் என்ற சரித்திர உணர்ச்சியொரு சிறிதும் இல்லாதவர்களான, மானம் இன்னது என்பது உணராதவர்களான, பார்ப்பனன் தாசிமகன் ஆதிய பொருளையுடைய சூத்திரன் என்னும் பதத்தால் தங்களை அழைப்பதற்கு ஒப்புக்கொள்பவர்களான சில தமிழர்களும் ஆரியர் என்றும் பிராமணர் என்றும் உரைப்பார்கள். அவர் ஆரியரும் அல்லர் பிராமணருமல்லர். ஏன் "கோறுன அகத்தீசர் ஜாதி பேசும் கொற்றவனே வேளாளன் என்னலாகும்" (போகர் சத்தகாண்டம் 713) என்பதால் தெரிய வருகிறது. அவர் தமிழரே.

ஐவகை நிலவரசர் பிரஜைகள் இவர்களின் வழியினின்று வந்த குறுநில வேந்தர் பலரிலர் தமிழகத்தில் இருந்தனர். அவர்கள் பெருநில வேந்தர்க்குக் கீழ்ப்பட்டவர்களும் கீழ்ப்படியாதவர்களுமாய் இருந்தனர். பாரிவேள் காவிதி என்னும்பட்டங்கள் பெருநில வேந்தரால் கொடுக்கப் பெற்றவர். அவர்களில் பலர் அப்பெருநிலவேந்தரிடம் ஊழிய மானியம் பெற்றிருந்தனர் மலையமான் திருமுடிக்காரி என்பவன் மூவேந்தரிடமும் ஊழிய மானியம் பெற்றவன். அந்தக் குறுநிலவரசர்களுக்குப் பெருநிலவேந்தரைப் போன்ற அரசசின்னங்கள் இல்லை. ஆனால் வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம், தேர், வாள் என்பன அக்குறுநிலவரசர்களுக்குரியன அது "வில்லும் வேலும் கழலும் கண்ணியும், தாரும் ஆரமும் தேரும் வாளும் மன் பெருமரபின் ஏனோர்க்கும் உரிய" (தொல் பொரு மரபியல் சூ 83) என்பதால் அறியப்படும். அவர்களுள் பெருநில வேந்தரிடம் ஊழிய மானியம் பெற்றவர் அப்பெருநில வேந்தர் தங்கள் பகைவரோடு போர் செய்யும்படி நேரிட்டால் அப்பொழுது அவர்கள் அப்பெருநில வேந்தர்க்குத் தங்களுடைய சேனையுடன் சென்று போரில் உதவி புரியவேண்டும். சிலர் மந்திரியைப் போலவும் இருந்தனர். பிரஜைகள் நிலத்தில் வரும் பலனில் ஆறில் ஒன்று அரசர்க்குக் கொடுத்து எஞ்சியதை உண்டு இனிது வாழ்ந்தனர்.

இவ்வாறு பெருநிலவேந்தராகிய முடியுடைய சேரபாண்டியசோழர் எனப்பெயரிய மூவேந்தர் மரபினர் தமிழகத்தின் ஏகாதிபத்தியத்தை வகித்து அன்பு அறிவு கண்ணோட்டம் இன்சொல் எளிய செவ்வி போரில் தங்கள் வீரர்க்கு முன்னே முற்பட்டு நிற்கும் பெருவீரம் ஆதிய உத்தம இலக்கணங்கள் அமையப்பெற்று தங்களையும் இடித்துக் கூறும் மனவலிமைவாக்குக் காயங்களின் தூய்மை அறம்புரி கொள்கை அன்புடைமை இவையாதிய நற்குணநற்செய்கைவாய்ந்த புலவர் பெருமக்களை தங்களுக்கு அரிய துணைவராய்க்கொண்டு அரசியல்நடாத்த குறுநிலவேந்தர் சேனைத்தலைவர் அப்பெருநில வேந்தர்க்குப்போர்நேர்ந்தபொழுது தங்கள் தானையுடன்சென்று போர்புரிந்து தங்கள் உம்பளிக்கையைச் செலுத்தி போரால் நேர்ந்த வடுக்களையே தங்களுக்கு நாளணியாகக்கொண்டு அரசிற்கேற்ற கருமச்சூழ்ச்சி விரும்பிய ஞான்று அமைச்சியலோடு நின்று அறிவு உதவி மானமும் மறனும் அறனும் உடையராய்த் திகழாநிற்க அவர்கள் எல்லாருடைய அரசாட்சி வீரம் கொடை ஆதியவற்றைப் பாணர் பாடினிகள் கூத்தர் விறலியர் புலவர் எனப்படுவார் புகழ்ந்து அவர்களிடம் பொன்னும் பூவும் ஆரமும் யானையும் தேரும் ஊரும் நாடும் ஆதியவற்றைப் பரிசாகப்பெற்று வாழ்ந்தனர். பார்ப்பனமக்களோ நிகழ்காலத்தில் ஆங்கிலம் கற்றலன்றி அரசாங்கப்பதவியை அடைய முடியாதென உணர்ந்து அதைக்கற்று அரசியல் துறைகள் பலவற்றிலும் மேன்மையான பதவிகளை அடைந்து தங்கள் இனத்தவரே நன்மையடையச்செய்து வருவதுபோல் தமிழ்மொழி கற்றலன்றி தமிழகத்தில் தாங்கள் சிறப்படைய முடியாதென உணர்ந்து அம்மொழியைக்கற்று தமிழ்வாணராகி முடியுடை வேந்தர் சிற்றரசர் அமைச்சர் சேனைத்தலைவர் வீரர் முதலியவர்களைப்பற்றி அவர்கள் விருப்பத்திற்கேற்ப செய்யுள் இயற்றி அவர்களிடம் பொன் முதலியவற்றைப் பரிசாகப்பெறுதல், ஊர்நாடு இவற்றைப்பிரமதாயமாகக் கோடல், தானும்தன் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்என உரைத்து அரசரைப்பெருவேள்வி வேட்பிக்கச்செய்து அரசருடைய அரும்பெரும் பொருளைத்தங்கள் கூட்டத்தோடு கொள்ளைகொண்டு உண்ணல், அரசர்களைப்பல்வேறு யாகங்கள் இயற்றச்செய்து ஜனச்சேதமும் பொருட்சேதமும் நாட்டில் உண்டாக்கல் இவையாதியன இயற்றி அச்சேரபாண்டிய சோழருடைய ஏகாதிபத்தியத்தை அடியோடு வீழ்த்தினர்.

இனிப்பார்ப்பனர் தங்களுடைய சமூகத்தினர் நன்மையடைய எத்தகை இராஜ்ய நிர்வாகவித்தை (Economics) யைக்கைக்கொண்டு மூவேந்தர் ஆதிக்கத்தைத்தொலைத்தனர் என்பதை ஆராய்வோம்.

### பார்ப்பனர் கைக்கொண்ட நிர்வாக வித்தை (Economics) யும் பிறவும்.

ஐவகை நிலவரசர்களிடம் முதன்முதல் பார்ப்பனர் பாங்கர்களாக அமர்ந்திருந்தனர் என முன்னர் விளக்கப்பட்டது. அப்படிப்பாங்கர்களாக இருந்துவந்தபார்ப்பனர் அவ்வைவகை நிலவேந்தர் மரபினின்றுவந்த சேரபாண்டிய சோழர்களிடம் மந்திரிகளாக அமர்ந்து, அரசரில்லாவிட்டால் பார்ப்பனரே அரசாளுவதற்குரியர் என நிலைநாட்டிக்கொண்டனர். அது "அந்தணாளர்க்கரசுவரைவின்றே" (தொல். பொருள், மரபியல் சூ 82) அதாவது அரசர் இல்லாவிடத்து அந்தணரே அவ்வரசியல் பூண்டு நாடாளுதற்கு உரியர் என உரைப்பதால் அறியப்படுகிறது. மந்திரியாக அமர்ந்து அரசரில்லாவிடத்துப்பார்ப்பனர் அரசாளுதற்குரியர் எனக்கூறித்தங்கள் சமூகத்தினர் ராஜ்ய நிர்வாகத்தை வகிப்பதற்கு வழி தேடினர். இதுதான் தமிழ்வேந்தர் அரசாட்சியைத்தொலைக்க பார்ப்பனர் மிகமிக முக்கியமானதாய்க்கொண்ட ராஜ்யநிர்வாகவித்தையாகும். அரசியலில் மிகமிகமுக்கியமான மந்திரிபதவியை ஏற்று அரசரை வசப்படுத்திக்கொண்டு மக்களைத்தங்கள் வசப்படுத்தத்தொடங்கி பாணிக்க

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# பெரிய புராணம்.

## மநுச் சோழன் வரலாறு.

—)o(—

(மெய்கண்டான் எழுதுவது.)

திருவாரூரிலிருந்துசோழநாட்டை அரசுபுரிந்த மன்னன் ஒருவனிருந்தான். அவன் மநுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தினமையால் அவனுக்கு மநுநீதி கண்ட சோழன், அல்லது மனுமுறை கண்ட சோழன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. அவனுக்கு நீண்டநாட்கள் பிள்ளை யில்லாமலிருந்து சிவபெருமான் அருளால் ஒருமகன் பிறந்தான். அவனுக்குத் திருவாரூர்த்தியாகராசசுவாமியின் பெயராகிய வீதிவிடங்கன் என்றபெயர் வைக்கப்பட்டிருந்தது. வீதிவிடங்கனும், எல்லாக்கலைகளையுங்கற்று அறிவுடையவனாகவும், சிவபெருமான் மீது பக்தியுடையவனாகவும் இருக்கும்போது ஒருநாள், வீதிவிடங்கன் தேரின்மீதேறிக்கொண்டு சேனைகள் புடைசூழக் கோயில் நோக்கிச்சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பசுவின் கன்று துள்ளி யோடிவந்து தேர்ச் சக்கரத்தில் வீழ்ந்து இறந்தது. அதுகண்ட வீதிவிடங்கன் மிகவும் மனவருத்தமுற்று, அப்பாவம் தீருதற்குரிய சடங்குகள் செய்யும்பொருட்டுப் பிராமணர்களுடன் சென்றான்.

கன்றை யிழந்த தாய்ப்பசு, மிகவும் வருந்தி அரசனுடைய அரண்மனையை யடைந்து அங்குக் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்த மணியைக் கொம்பினால் ஆட்டிற்று. இவ்வோசையைக் கேட்ட மநுநீதி கண்ட சோழன் விரைந்தோடிவந்து பசுவைப்பார்த்து வருந்தி அதற்கு நேர்ந்த துன்பத்தை யறிந்துக்கொண்டான். உடனே தனது மந்திரிமார்களை யழைத்து இதற்கென்ன பரிகாரம் செய்யலாமென்று கேட்க அவர்கள் அறநூல்களில் கூறப்படும் பிராயச்சித்தங்களைச் செய்யலாமென்று கூற, உடனே அரசன், அதனை மறுத்து அப்பசுவைப்போல் தானும் தனது மகனை யிழந்து வருந்துவதுதான் சரியானதென்று கூறி ஒரு மந்திரியை யழைத்துத் தனது மகன்மேல் தேரைச் செலுத்திக்கொன்று வருமாறு கட்டளையிட்டான். அம்மந்திரி அச்செயலைச் செய்ய அஞ்சி அரசனை விட்டு விலகிச் சென்று உயிரைவிட்டான். மற்ற மந்திரிகளும் அரசன் வார்த்தையைக் கேட்காமலகன்றனர். பின்னர் மனுநீதிகண்ட சோழன் தானே தேரூர்ந்து சென்று தன் மகன் வீதிவிடங்கன்மீது தேரைச்செலுத்தி அவனைக்கொன்றான். உடனேபரமசிவன் தோன்றி, மநுநீதிகண்ட சோழனுக்குகாட்சிகொடுத்து இறந்த மகனையும், பசுங்கன்றையும், மந்திரியையும் எழுப்பினார். இதைக்கண்டு தேவர்கள் பூமாரி பொழிந்தனர் என்பது பெரிய புராணத்திற் கூறப்படும் மநுச்சோழன் வரலாறாகும்.

இவ்வரலாறு எவ்வாறு பெரியபுராணத்தில்வந்து நுழைந்ததென்று விளங்கவில்லை. பெரியபுராணத்திற்கு, திருத்தொண்டத் தொகையையும், திருத்தொண்டர் திருவந்தாதியையும் முதல் நூல்களாகக்கொள்வோமாயின், இது சேக்கிழாரால் நடுவிற் சேர்க்கப்பெற்ற கதை யென்பதை உணரலாம். ஏனெனில் அவை இரண்டிலும் இவனைப்பற்றிய குறிப்பு ஒருசிறிதுமில்லை.

இம் மநுநீதி கண்ட சோழன் சிவனடியார்களின் கதைகளைக் கூறும் புராணத்தில், ஒருவனாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றான். ஆகவே, இவனும் ஒரு சிவனடியவனாகவே கருதப்படுகின்றான். இதற்கு ஆதாரமுண்டா வென்பதைச் சிறிது நினைத்துப் பார்க்கவேண்டும். இச் சோழனுடைய வரலாறு சிலப் பதிகாரம் முதலிய சங்க நூல்களில் கூறப்படுகிறது. அக்கூற்றுகளைக் கொண்டு ஆராய்வோமாயின், இவன் ஒருசிவபக்தனாகவும், மநுநீதி கண்ட சோழன் என்று பெயருடையவனாகவும் இருக்க இடமில்லை. அந்நூல்களைக் கொண்டு இவனுடைய காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னென்று கூறலாமேயன்றிப் பின்னென்று கூறமுடியாது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இப்பொழுதிருக்கும் திருவாரூர் கோயிலும், சைவ மதமும் இல்லையென்றே நிச்சயமாய்க்கூறலாம். அன்றியும் பழந்தமிழ் நூல்களில் ஓரிடத்திலேனும் மநுநீதியின் பெயரையே காணமுடியவில்லை. மநுநீதியை இன்னதென்று தமிழ் மக்கள் அறியமாட்டார்கள். ஆகவே அந்நூலின்படி அரசுபுரிந்தான் என்று கூறப்படுவது பெரும் பொய்யாகும். ஆகவே மநுநீதி கண்ட சோழனென்னும் பெயர், சேக்கிழாரால் கற்பிக்கப்பட்ட பொய்ப்பெயராகும்.

அன்றியும் இவன் திருவாரூரிலிருந்து அரசாண்டதாகப் பெரிய புராணத்திற் கூறப்படுவது பெரிய பொய்யாகும். அதற்குப் பழைய நூற்சான்றுகள் ஒன்றுமில்லை. பழந்தமிழ் நூலாகிய சிலப் பதிகாரத்தின்படி பார்ப்போமாயின் இம்மன்னன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாண்டவனாகக் காணப்படுகின்றான். இதனை, கண்ணகி, பாண்டியனிடம் சென்று வழக்குரைக்கும்போது, தனது காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறும் பகுதியில்:—

> "ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்
> தான் தன் அரும் பெறற் புதல்வனை ஆழி
> யின் மடித்தோன், பெரும் பெயர்ப்புகார்
> என்பதியே"

என்று கூறும் வரிகளால் அறியலாம்.

அன்றியும், பெரிய புராணத்திற் கூறப்படும் மநுச் சோழன்கதை முற்றும் பொய் யென்பதைப் பழமொழி யென்னும், நீதிநூலிற் கூறப்படும் ஒரு வரலாற்றால் அறியலாம். அவ்வரலாற்றை:—

> சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
> காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
> கறவைக்கன்றூர்ந்தானைத் தந்தையுமூர்ந்தான்
> முறைமைக்கு மூப்பிளமையில்.

என்னும் பாடலால் உணரலாம். இதிற் கூறப்படும் வரலாற்றையும் சுருக்கமாகக் கூறுகின்றோம். சோழமன்னவன் மகனொருவன் ஒரு பசுவின் கன்றை தேர்ச்சக்கரத்தாலரைத்துவிட்டான். அதனைக்கண்ட அமைச்சர் முதலிய அறிஞர்கள், மகன் செய்த குற்றத்தை அரசனாகிய தந்தை அறியாமல் மறைத்து விட்டார்கள். பல ஆண்டுகளோ பல மாதங்களோ சென்றபின் சோழன் தன்மகன் செய்த குற்றத்தை யெவ்வாறோ அறிந்து கொண்டான். உடனே, தன் மகன் குற்றஞ்செய்து நெடுங்காலமாயிற்று என்று நினைக்காமல் அப்பொழுதே தன் மகனை யழைத்துத் தேர்ச்சக்கரத்தாலரைத்து விட்டான் என்பது மேற்காட்டிய பாட்டிற் கூறப்படும் கதையாகும்.

பெரியபுராணத்திற் கூறப்படும் கதையில், கன்று இறந்தவுடன், பசுதானே அரண்மனைவாயிலையடைந்து, மணியைக் கொம்பினால் அசைத்ததாகவும், அதைக்கண்டு மன்னன், மந்திரியை ஏவினதாகவும், அவன் சென்று உயிர்விட்டதாகவும், பிறகு தானே சென்று மைந்தனை அரைத்ததாகவும், உடனே பரமசிவன் தோன்றி மைந்தனையும், மந்திரியையும், பசுக்கன்றையும் எழுப்பித் தந்ததாகவும் கூறப்படுவதில், பசு சென்று மணியை யசைத்ததாகக் கூறுவதும், இறந்தவர்களைச் சிவன் தோன்றி எழுப்பித் தந்தாரென்று கூறுவதும் இயற்கைக்கு பொருந்தாதென்பதை யாரும் உணரலாம். மேற்கூறிய பழமொழிப் பாடலாலறியும் கதையினால் இயற்கைக்கு மாறுபட்டுக்கூறும் பெரிய புராணக் கதை பொய் யென்பதை யுணரலாம்.

ஆகவே, செங்கோன்முறை தவறுமல் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நாட்டையாண்ட ஒரு சோழ மன்னனை—காலம்—மதம்—பெயர் முதலிய ஒன்றும் அறியமுடியாத ஒரு மன்னனை சைவ மதத்திற்குள்ளாக்கி, மநுநீதியின்படி அரசாட்சி செய்தவனாக்கி, பெரியபுராணத்தில் நுழைத்து வைத்திருப்பது சேக்கிழாரின் கற்பனா சக்தியை காட்டுகிறதன்றோ? இதுபோலவே பல கதைகளையும், சைவ மதத்தைப் பரப்புவதற்காகவும், செந்தமிழ்ச் சிந்தாமணியின் பெருமையைக்கெடுப்பதற்காகவும் எழுதி வைத்திருக்கின்றாரென்றதை நடுநிலையாளர் எவரும் மறுக்கமுடியாதென்பது உறுதி. மதப்பற்றுடையவர்கள் பொய் கூறுவதற்குச் சிறிதும் அஞ்சமாட்டார்களென்பதை இதைக்கொண்டும் அறியலாம்.

# பினாங்கு இந்து சபையில் ஜாதிப்பேய்.

"இந்துசபை" என்ற சபையின் நோக்கமென்ன? மக்களின் மீது துஷ்டமிருகங்களைப்போல் சீறிப்பாய்ந்து துன்புறுத்தும் துஷ்ட செயலுக்கு இந்துசபை துணைபோவதா? அல்லது அவ்வித மூடக்கொள்கைகளை ஒழிக்கப்பாடுபடுவதா? என்பதை யோசிக்க நேயர்களுக்கே விட்டுவிட்டேன். பினாங்கில் ஓர் கூட்டத்தினர் "இந்துசபை" எனப்பெயர் வைத்துக்கொண்டு, தாம் உயர்ஜாதியர் என மூடகெர்வம்கொண்டும் சங்கீதக்கூட்டத்தார் என ஒருசேரம்பேறிக்கூட்டத்தாருக்கு மேற்படி சபையிலுள்ள காசை கொட்டி கொடுத்துக் கொண்டும், அன்னவர் வளையாடும் ஆபாசப் பாட்டுகளை காதில்வாங்கிக்கொண்டும், குடுமி அவிழ தலையாட்டி தாளம் போட்டுக்கொண்டும், எவனாவது பார்ப்பானெனக் கூறினால் அவன் காலில் விழுந்துகொண்டும், தாழ்த்தப்பட்டவரெனக்கூறும், சகோதரர் யாராவது அச்சபையின்முன் தப்பித்தவறி நின்றிருப்பது கண்டால் சிங்கக்குட்டிபோல் ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து தூக்கிக்கொண்டும் இருப்பதுமான கொள்கைகளைத் தவிர வேறு பயன்படக்கூடிய கொள்கை ஒன்றுமில்லாமல் வாழ்ந்து வருகின்றனர். இச் சபையின் கணக்கில் பிரேதாதம் ஒன்று செய்யப்பட்டு ஏழைகளுக்கு இனமாய் கொடுப்பதற்கென வைக்கப்பட்டிருக்கிறது. ஏழை வண்ணார சகோதரரொருவர் இறந்துவிட்டார் அதற்காக ரதம் கேட்டதற்காக கொஞ்சமேனும் இரக்கமற்று, அச்சகோதரர் மீது சீறிவிழுந்து விரட்டினார்கள். என்னே இவர்களின் ஜாதியிறுமாப்பு! இச்சபைக்கு தலைவர் இந்த ஜாதிஇறுமாப்புக்கொண்ட நடேசம்பிள்ளையாவர். இவருக்கு 'தமிழ் நேசன்" என்னும் ஜாதிக்கர்வம் கொண்ட "பார்ப்பனநேசன்" தான் புகழ் தேடிக்கொடுக்கவேண்டும். மேற்படி இந்துசபையின் தலைவரிடம் ஏழைமக்களின் பரிதாபத்தை எவ்வளவோ எடுத்துக்கூறியும், தம் பழைய குருட்டு வைதிகத்தையே போற்றிவருகிறார். இந்துசபைப் பிரேதாதம், எந்த விளப்பன் வீட்டுக்காசு என்பதை நடேசப்பிள்ளை அறியவேண்டும், எக்குலத்தவனாயிருந்த போதிலும் அவன் இந்துவாயிருப்பானாகில் அவனுக்கு இந்துசபையில் சுதந்திரம் உண்டு என்பதை மேற்படி பிள்ளை அறியவேண்டுகிறோம். தவிர இவர் பேரூர் இந்துமகாஜன சங்கத்தை கடைபிடித்தொழுக கேட்டுக்கொள்ளுகிறோம்.

எ. கெ. சாமி செட்டியார்.

# கோபிப்புராணம்.

## கோபிசெட்டிபாளையமும் பார்ப்பனரும்.

இந்த ஊரில் சுமார் 500 பார்ப்பனர்கள் வீடுகளுக்குமேல் உண்டு. இவர்களில் நூற்றுக்கு 99 பேர்களுக்கு நஞ்சை பூமியுண்டு. குறைந்தது சாப்பாட்டுக்கு 20 சலகை நெல்லுக்குக் குறையாத வருமானம் அநேகமாய் எல்லோருக்கும் உண்டு. அவரல்லாத தமிழ்மக்களும் அநேகம்பேர் பெரிய பணக்காரர்கள். இன்றைக்கும் பொதுவாக பார்ப்பனர் அட்டூழியங்களையும், இரக்கமும் யோக்கியமுமற்ற தன்மையையும் காணவேண்டின் இந்த ஊரிலேயே நன்றாய் காணலாம்.

உதாரணமாக இங்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இதில் பத்தாவது வகுப்புவரையில் மாணவர் படித்து வருகின்றனர். இப்பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பிலிருந்து கடைசி மேல்வகுப்புவரை பார்ப்பன உபாத்தியாயர்கள்தான். அநேக காலமாய் நம் "நாவித" சகோதரர் முதலியோரைக் கூட இவர்கள் இப்பள்ளியில் படிக்க அனுமதிப்பதில்லை. இது ஒரு கமிட்டி என்னும் பார்ப்பார் பார்ப்பனரல்லாதார் ஆகிய கூட்டத்தாரால் நடத்தப்பட்டு வந்தாலும், பணம் கொடுக்கும் உரிமைதான் பார்ப்பனரல்லாதாருக்கு உண்டேயொழிய, மற்ற உரிமைகள் ஒரு சிறிதும் பார்ப்பனரல்லாதாருக்குகிடையா. ஏனெனில், "சூத்திரன் தொழில், பிராமணனுக்கு அடிமைவேலை செய்து அவன் கொடுத்த எச்சிலை வாங்கி உண்டு அவன் கொடுத்த கந்தையை உடுத்திக் கொண்டு, பொருள் இருந்தால் உடனே அதை பிராமணனுக்குக் கொடுத்துவிடவேண்டும்" என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுவதை யாவரும் அறிந்துள்ளார்கள்.

இப்பொழுது புதிதாக அரசாங்கத்தார், "எவனொருவனை பிறப்பினால், சாதியால், குலத்தால் தாழ்ந்தவன் என்று பள்ளிக்கூடத்தில் கல்வி கற்க அனுமதிக்க மாட்டோம் என்று எந்தப் பள்ளிக்கூடம் கூறுகிறதோ அந்தப் பள்ளிக்கூடத்திற்கு கிராண்டு கொடுக்க மாட்டோம்" என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஆனால் நம்ம கோபிப் பள்ளியின் உபாத்தியாயர்கள், கிராண்டு போனாலும் தாழ்த்தப்பட்ட நம்மவரைப் பள்ளியில் சேர்க்கமாட்டார்கள். சேர்த்தால் கடவுள் கண்ணைப்பிடுங்கிவிடுவார் என்று அவர்கள் சாஸ்திரத்தில் கூறியிருப்பதை நன்கு அறிவார்கள்.

பணத்தைப் பற்றி அவர்களுக்கு கவலையே கிடையாது. பணமில்லாவிட்டால், உடனே பார்ப்பன வக்கீல்கள் என்பவர்களில் நான்கு பேரும் சாஸ்திரி என்பவர்களில் நான்கு பேரும், பார்ப்பன அதிகாரிகளில் சிலரும் சேர்ந்து பக்கத்துக் கிராமங்களிலிருக்கும் பார்ப்பனரல்லாத நம்மவரிடம் போய் "படிப்பு விஷயத்திற்கு தாங்கள் உதவி செய்ய வேண்டும்; தாங்கள் எப்படியாவது எங்கள் குறையை முடித்துத்தரவேண்டும்; இல்லையேல் பள்ளிக்கூடத்தை அடுத்த மாதமே மூட வேண்டியது தான்" என்றால் இவர்கள் சூழ்ச்சியையும் அயோக்கியத்தனத்தையும் அறிய முடியாதபடி இவர்கள் சொல்லுவதை நம்பி நம்மவர்கள் பணத்தை அள்ளிகொடுத்து விடுகிறார்கள். ஏனெனில் "சாமி பேரால் பொட்டுக்கட்டி சாமி கூத்தியாள் என்று பெயர் வைத்துக்கொண்டு அவ்விடத்தில் கோயில் பூசாரிப்பார்ப்பாரும், பக்தியுடன் கோயிலுக்கு வருபவரும் போய் மேக வியாதி சம்பாதித்துக் கொண்டு மக்கள் சீர்குலைந்து நிற்பது நமது கடவுளுக்கும் நமக்கும் பெரிய அவமானம், அது வேண்டாம்" என்றால் உடனே "கடவுள் போச்சு மதம் போச்சு" என்று கூக்குரல்போட்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் குணம் பார்ப்பாருக்கு இயற்கையானதால், நம்மவரை, "கல்வி, கல்வி" என்று வஞ்சித்து பொருள் பறிப்பது ஒரு அதிசயமல்ல. உதாரணமாக நான்கு மாதங்களுக்குமுன் அன்பும் அறிவும் உருவாய் பெற்றவரும் அநேக ஏழை மக்களைக் காப்பாற்றுபவருமான கொங்கரபாளையம் உயர்திருவாளர் கே. என். நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் திருவடியில் போய் மேற்சொன்ன பார்ப்பனக்கூட்டம் விழுந்ததய்யா. உடனே அவர் இந்தப்பள்ளிக் கூடத்திற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து உதவினார். இப்படி கண்மூடி அள்ளிக் கொடுக்கும் தனவான்கள் மலிந்து கிடந்தால் இந்தப் பள்ளியில் பிராமண ஆதிக்கம் படிப்பு விஷயத்தில் எவ்வளவு இருக்கும் என்பதை நான் சொல்லாமல் நீங்களே அறிந்து கொள்ளலாம். இம்மாதிரி பார்ப்பனரல்லாத தர்மப்பிரபுக்கள் மலிந்து கிடக்கும் இந்த ஊரில் இருக்கும் வாய்க்காலில் நடக்கும் அக்கிரமத்தைப் பார்க்கலோ, அம்மம்ம! அறிவும் மனிதத்தன்மையும் உள்ள எந்த மனிதனும் அதைப் பார்த்து பொறுத்துக் கொண்டிருக்க மாட்டான்.

இங்குதான் ஐயா! இந்த கிமிஷமும் மனுநீதியில் கண்ட சட்டதிட்டங்கள் நடை பெற்று வருகின்றன. இங்கு படித்துறைகள் மூன்று. முதலாவது "பிராமணர் ஸ்நானக்கட்டம்" என்று எழுதியிருக்கிறது. இரண்டாவது "வைஸ்யஸ்நானக்கட்டம்" என்றுள்ளது. ஏன் க்ஷத்திரியருக்கில்லை என்றால், அது விரிக்கிற் பெருகும். சமயம் வாய்த்தால் பின்னால் விவரமாய் எழுதுகிறேன். பிறகு "சூத்திர ஸ்நானக்கட்டம்" என்று கடைசியில் உள்ளது. இங்கு அந்த முறை தவறிக் காலையில் எவனோ ஒரு அயலூர்க்காரன் போய்விட்டால் அவன் படும்பாடு இந்த பாழாய்ப்போன 'கடவுளே' தான் மூன்று கண்களையும் திறந்து பார்க்கவேண்டும். ஐயகோ! அவனுக்கு எத்தனை அடி! எத்தனை திட்டு! அவன் பெண்டுபிள்ளைகளுக்கு எத்தனை புருடர்கள் !!

இதுதான் இப்படியென்றால், குளித்து விட்டு, "ராம ராமாய ராமாஸ்ய ராமாகே" என்றோ அல்லது "ஊரிலிருக்கிறவனெல்லாம் எனக்கு அடிமையாக, நான் மாத்திரம் சர்வவல்லமையோடு பிச்சையெடுப்பதே தொழில் என்று சொல்லித் திரிய வேண்டும்" என்பதை சந்தியாவந்தன மகா மந்திரமென்றோ அல்லது ஒரு கருமாதிக் கல்லெடுப்புமந்திரத்தையோ உளறிக்கொண்டு பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளும் போவார்கள். மணி எழாகும் இந்தநேரத்தில் ஒருநாள் கணவனும் மனைவியும் கூலி செய்யாவிட்டால் அன்று அவர்களும் அவர்கள் குழந்தைகளும் கஞ்சியின்றி இறக்கநேரிடுமேயென்றும் ஏழுமணிக்கு அப்புறம் வந்தால்காத்து கடவு முதலிய வயல் வேலைகளுக்கு முதலாளிகள் சீறிவிழுந்து "இன்றுநேரம் சென்றுவந்த ஆட்கள் தேவையில்லை" யென்று கூறிவிடுவார்களோ என்ற கவலையாலும் 3 மைல் 4 மைல் தூரத்திலிருந்து ஓட்ட ஓட்டமாய், இந்த பாழாய்ப்போன சந்தியாவந்தனத்தார் குளித்து வரும்வழியிலேயே எதிர்நோக்கிப்போக வேண்டியிருப்பதினால் அங்ஙனம் சென்று கொண்டிருப்போரை, இந்தத் திமிர்பிடித்த பார்ப்பன மக்கள் "சூத்திர முண்டை தூரப்போடி" என்று கூக்குரலிட, அவர்கள் இயல்பாகவே அடிமை என்றும் கீழ்ஜாதியென்றும் அஞ்ஞானப்படுகுழியில் வீழ்த்தப் பட்டிருப்பதினால், விலகியே செல்வார்கள். அப்படிச்சென்றும் அவர்கள் நிழல்படுகிறதென்று அதற்காகத் திட்ட, உடனே கூடவரும் பார்ப்பன அயோக்கியர்கள் கற்களைஎடுத்து அவர்கள்பேரில் போட, காயம்பட்ட அவர்களில் சிலர் அழுதுகொண்டு தம்வினைப்பயன் என்று திரும்பி அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரிக்குச் செல்வார்கள், கடவுளே! அங்கும் சாம்பலை அடித்துக் கொண்டு வயித்தியனைச்சுற்றி இந்த அக்கிரமப் பார்ப்பனக் கூட்டம் நின்றுகொண்டு ஒருவரையும் உள்ளேவிடாமல் தூரப்போ! தூரப்போ! என்பார்கள்.

இந்தமாதிரி நமது பெண்களை கல்லாலடித்துக் காயம்செய்தவர்களும் செய்பவர்களும் யார் என்றால், விடிந்ததும் முறத்தை தூக்கிக்கொண்டு நமதுமக்கள் வீட்டுக்குவரும் பிச்சைக்காரபார்ப்பனரே. இவர்களில் அநேகமூடர்கள் பக்கத்து ஊர்களில் உபாத்தியாயத்தொழில் செய்பவர்கள். இவையெல்லாம் புராணமல்ல, கதையல்ல, அல்லது வேறு மேல்உலகத்திலோ கீழ்உலகத்திலோ நடப்பதுமல்ல. இப்பொழுது மோட்டார்வாடகை குறைவாகத்தானிருக்கிறது. யாராவது பார்க்க விரும்பினால் நாளை காலையே புறப்பட்டுப்போய் பார்க்கலாம். இந்தஊர் அக்கிரமத்தை எழுதுவதென்றால், உலகத்திலுள்ள காகிதங்கள் எல்லாவற்றிலும் எழுதினாலும் முடியாது.

இந்தஊர் யூனியன் பணத்தால் சமீபத்தில் வெட்டப்பட்ட ஒருகிணறு நம்மக்களும் பார்ப்பாரும் வசிக்குமிடத்திலிருந்தும்கூட, யூனியன் போர்டில், "சூத்திரர் அதில் தண்ணீர் இறைக்கக் கூடாது" என்று ஒருதீர்மானம் 5, 6 வருடங்களுக்கு முன்னேயே நிறைவேற்றி வைத்துக்கொண்டார்கள். இந்த ஊர் அக்கிரகாரத்தில் இன்றைக்கும் 'பறையர் சக்கிலிகள்' என்றுசொல்லப்படும் நமது சகோதரர்கள்போகக்கூடாது. தடும்பு தண்டோரா ஒன்றும் அவ்வீதியில் இவர்கள் அடிக்கக்கூடாது. எவ்வளவுபெரிய செல்வவந்தரானாலும் சரி, இந்தப் பார்ப்பனர்களுக்குஎவ்வளவுதலைமுறை தலைமுறையாக்கொட்டிக் கொடுத்துவருபவர்களானாலும்சரி, நம்தமிழ்மக்களது ஊர்கோலம்முதலியவை போகக்கூடாது. அங்கு நூற்றுக்கு 25 பார்ப்பனர் விவசாயம். 100-க்கு 3 ரூவரை வட்டிக்கு கொடுத்து லேவாதேவிசெய்பவர் 25 பேர். உத்தியோகம் செய்பவர்கள் 25 பேர். சாஸ்திரிகள் என்று சுற்றுப்புறக்கிராமங்களிலுள்ள மக்களை மதத்தின்பேரால் ஏமாற்றிவயிறுவளர்ப்பவர்கள். பாக்கி 25 பேர்கள் மாமாவேலைசெய்வதும் பக்கத்துக் கிராமங்களிலுள்ள அநேகமக்களுக்குக் கிட்டாட்டம்பழக்கி, அவர்கள் சொத்துமுழுவதையும் அவர்களது பூமிகளையும் வெளியூர்பார்ப்பனவக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், காப்பிக்கடைக்காரர்கள், புரோகிதர்கள் முதலியோருக்கு வாங்கிக்கொடுத்தும் பறித்தும், அநேகம்பேரை கோவணாண்டிகளாக்கியும் இன்னும் ஆண்டி ஆக்கிக்கொண்டும்வருகிறார்கள். இவ்வளவுநடந்தாலும் இன்னமும் மாதம் இருமுறை இவர்களுக்கு பார்ப்பனரல்லாத சோணகிரி மிராசுதாரர்களால் "பிராமண சமாராதனை" ஏற்பாடுண்டு. ஒன்று கோபி மாரியம்மன்கோவிலில், மற்றொன்று 2 மைல் தூரத்திலுள்ள பாரியூர் மாரியம்மன் கோவிலில் நடைபெறும். இதற்குள் வருடத்திற்கு இரண்டுமுறை சங்கராச்சாரியென்னும் பார்ப்பானைக்கூட்டிவருவார்கள். அவர் வந்தால்2,3 மாதங்களுக்கு கோபியைச்சுற்றி 10 மைல்விஸ்தீரணத்திற்கு ஒருபார்ப்பனர்வீட்டிலாவதுநெருப்புப்போடமாட்டார்கள். அவர்கள் அடுப்பாங்குழியில் பூனைதான் படுத்திருக்கும். இவ்வளவு அக்கிரமங்களையும், இப்பார்ப்பனக்கூட்டத்தார் பகுத்தறிவாகவோ பகுத்தறிவின்றியோ செய்யும் வஞ்சகங்களையும் தினசரி அனுபவித்துக்கொண்டு தானும் தன்னைவருணாசிரம இந்துமதத்தவன்என்று சொல்லிக்கொண்டு, நாயக்கர் பார்ப்பனனை திட்டுகிறார் என்றுமாத்திரம் சொல்லுபவர்களாகிய பார்ப்பனரல்லாதாரான நம்மவர்கள் எவ்வளவுதூரம் கடைந்தெடுத்த மூடசிகாமணிகளாய் இருக்கவேண்டும். எவனுக்காவது மானம் வெட்கம் சுயமரியாதையிருந்தால் அவன்தன்னை இம்மாதிரி இந்துமதத்தவன் என்று சொல்லிக்கொள்வானா.

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# ஹிந்து மதத்திலும் வைதீக மதத்திலும் பெண்கள் நிலைமை.

(ஒரு தயாளர் எழுதுவது.)

ஹிந்துக்களுக்குப், பின் வாரிசு பாத்திய உரிமை, சொத்துரிமை, மணம், ஸ்வீகாரம், மரணசாசனம், ஏனைய குடும்ப சம்பந்த நிகழ்வுகள் ஆகிய விஷயங்களில் அவர்களுடைய சொந்த சட்டமாக (சிறிது புதிய மாறுதலுடன் மட்டும்) அனுசரிக்கப்பட்டு வருகிற "ஹிந்து லா" என்கின்ற சட்டநூலிலிருந்து சிற்சில பாகங்கள் இங்கு வெளியிடப் பட்டிருக்கின்றன. "ஹிந்து லா"வுக்கு ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப்பட்ட 3 முக்கிய ஆதாரங்கள் என்னவென்றால்: (1) சுருதி—இது தெய்வம் என்று சொல்லப்படுவதன் வார்த்தைகள்; (2) ஸ்மிருதி—இது பண்டைய ஞானிகள் என்பவர்கள் பரம்பரையாய்க் கையாண்டு வந்த முறைகள்; (3) பழக்க வழக்கங்கள்.

முதலில் "ஹிந்து லா"வை ஹிந்துப்பண்டிதர்களின் உதவியினால் இங்கிலீஷ்கார நீதிபதிகள் செலுத்தி வந்தார்கள். 1868-ம் ஆண்டில், கோர்ட்டுகளின் உத்தியோகதோரணை பெரிகளாக நியமிக்கப்பட்டுவந்த பண்டித வர்க்கத்தார் நீக்கி விடப்பட்டனர். பிற்பாடு கோர்ட்டார், தாமே சட்டத்தை விவரிக்கும் வேலையை வைத்துக்கொண்டனர்.

கீழ் காணும் பகுதிகளிலிருந்தே நமது "ஹிந்து லா" என்பதானது நமது பெண்களை நீங்காத அடிமைத் தனத்திலேயே எப்படி ஆழ்த்திவைத்து விடுகின்றதென்பதை வாசகர்கள் தாமே அறிந்து கொள்ளலாம். ஹிந்துலாவின் குறிப்பிட்ட சில பகுதிகளாவன:

### மணம் செய்வதுபற்றி.

1. ஒரு ஹிந்து ஒரு மனைவியையாவது பல மனைவிகளையாவது உயிருடன் உடையவனாயிருப்பினும், இன்னும் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணம்செய்துகொள்ளலாம் (S. 348).

2. ஒரு பெண் ஒருபுருஷனைத்தவிரவேறு ஒரு மனிதனைக் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது (S. 349.).

புருஷன் மரணமாய்விட்டபோதும்கூட பெண்கள் மறுபடி மணம் செய்துகொள்ள சுதந்திரமுடையவர்களாயில்லை. ஆனால் அத்தடை சட்டசபையால் (1856-ம் ஆண்டின் XV சட்டத்தினால்) நீக்கப்பட்டுள்ளது.

3. ஹிந்து மணம், பேருக்கு மாத்திரம் தெய்விக காரியம் என்று கருதப்படினும் அது யதார்த்தத்தில் அப்படி காணப்படவில்லை; காரியத்திலும் அப்படித் தோன்றவில்லை. அத்தகைய மணத்தை ஒரு கணவன் எச்சமயத்திலும் ரத்து செய்துவிடலாம். ஆனால் அவனது மனைவி மட்டும் அப்படிச் செய்ய முடியாது. இது விபரீதமாகவே உள்ளது. ஆகவே, ஹிந்து கலியாணத்தினுடைய பயன்கள் பெண் வர்க்கத்திற்கு மிகவும் கொடுமையுள்ளதாகவே உள்ளன.

குறிப்பு:—ஆனால், வீட்டில் ஒற்றுமையின்மையும் அன்பு இன்மையும் ஏற்படுமாயின் புருஷனை விட்டு விலக மனைவிக்கு மாத்திரம் ஏன் உரிமை இல்லை?

4. பௌதாயன் (சட்டத்திற்கு அதிபதியான ஒரு ரிஷி) புருஷனானவன் மணவிலக்கு செய்து கொள்ளுவதை ஆதரிக்கிறார்; அவன் 'கலியாணம் செய்துகொண்ட 10-ம் ஆண்டுவரை குழந்தைகள் பெறாத ஒரு மனைவியை விட்டுவிடட்டும்; வெறும் பெண் குழந்தைகளை மாத்திரம் பெறும் ஒருத்தியைப் பன்னிரெண்டாம் ஆண்டில் விட்டுவிடட்டும்; கல்யாணம் செய்துகொண்ட 15 வருஷம்வரை, எந்த மனைவியிடம் பிறக்கும் குழந்தைகள் யாவும் இறந்து போய்விடுகின்றனவோ, அவளை விட்டுவிடட்டும்.

### பெண்களின் அந்தஸ்துபற்றி.

1. நாரதர் (ஸ்மிருதிக் கர்த்தாவானரிஷி) கூறுகிறார். 'எவனொருவன் வாங்கின கடனையோ, பொருளையோ திரும்பக் கொடுக்கவில்லையோ அவன், கடன் கொடுத்தவனுடையவீட்டில் ஒரு அடிமையாகவாவது, ஒரு வேலைக்காரனாகவாவது, ஒரு ஸ்திரீயாகவாவது, ஒரு நாலு கால் மிருகமாகவாவது பிறப்பான்.

2. மனு (ஹிந்து சட்டம் செய்தவராய், வேத முறைகளை முதன் முதலில் வெளியிட்டவராய், இன்றைக்கும் மக்கள் யாவரும் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்களைச் செய்தவராய் உள்ளவர்) கூறுவது: ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு அடிமை ஆகியோர் சொத்துக்களை வைத்திருக்க யோக்கியதை அற்றவர்களாவார்கள். அவர்கள் என்ன சம்பாதித்தாலும் அதெல்லாம் அவர்கள் எவர்களுக்கு உரிமையுடையவர்களோ அவர்களைச் சேரும்.

3. பௌதாயனர் கூறுவது: எந்த மனிதனும் பெண்களுக்கு இரவலோ, கடனோ கொடுக்கக் கூடாது; அடிமைகட்கும், குழந்தைகட்கும்கூட ஒன்றும் இரவல் தரக்கூடாது.

4. மத விதிகள் கூறும் நூல்களில் ஒன்றாகிய ராமாயணம் உரைப்பது: 'தப்பட்டைகள், பயிரிடுபவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், மிருகங்கள், பெண்கள் ஆகிய இவர்கள் எல்லாம் கடுமையான முறையினால் ஒடுக்கிவைக்கப்பட வேண்டும்.' (சுந்தரகாண்டம், 5).

5. மனு கூறுகிறார்: பகலும் இரவும் மாதர்கள் அவர்களுடைய சொந்தக்காரர்களை அண்டியே இருக்கும்படியாகச் செய்யப்பட வேண்டும். பெண்களைக் குழந்தைப் பருவத்தில் தகப்பன்மாரும், வாலிப காலத்தில் புருஷன்மாரும், வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகளும் காப்பாற்றுகிறார்கள். ஒரு பெண் ஆனவள் ஒருபோதும் சுயேச்சையாயிருக்கத் தகுதி யுடையவளல்ல. அவளுடைய வாழ்வு பூராவும் நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ, அலட்சியக்காரர்களாகவோ இருக்கும்படியான மற்றவர்களுடைய இரக்கத்தினால் வாழ்பவளாகவே இருக்கவேண்டும், ஏனெனில் பெண்கள் அவ்வளவு அற்பஜீவர்களாகவே இருக்கிறார்கள்.

உத்தமஸ்திரீக்கு மனுவுரைக்கும் யோக்கியதாம்சமென்னவெனில், அவளுடைய தகப்பன் அவளை எவனுக்குக் கொடுத்திருக்கின்றானோ அவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் அவனையே அவள் மரியாதை செய்யட்டும்........ஒரு புருஷன் துர்நடத்தையுடையவனாயினும், இன்னொருமாதினிடம் அன்புகொண்டவனாயினும், நல்லதன்மைகளில்லாதவனாயினும், அவனைத் தெய்வம் போலவே கருதுகிறவள்தான் புண்ணிய ஸ்திரீயாவாள். (அத்தியாயம் V, 154.)

7. மனு, ஒருமாதானவள், எவ்வளவு நல்லவளாகவும், உத்தமமானவளாகவும் இருப்பினும், அவள்தன் கணவனுடைய குணங்களையுடையவளாகத்தான் இருப்பாள். மேலும் அவர்சொல்லுவது: ஒரு மங்கையானவள்தான் மணம் செய்துகொண்ட ஒரு புருஷன் என்ன குணங்களையுடையவனாயிருக்கின்றானோ அதேகுணங்களையே அவளும் அடைவாள். எதுபோலவெனில் கடலில்போய்க்கலக்கிற ஆற்றைப்போல் (அத். IX 22).

8. பௌதாயனர் உரைப்பது: 'மாதர்கள் அறிவுகளே இல்லாதவர்கள். அவர்கள் சொத்துரிமை கொள்ளவும் யோக்கியதையற்றவர்கள்.'

### ஸ்ரீதனப்பொருள்பற்றி.

1 ஸ்ரீதனச்சட்டமானது மிகவும் கொடுமையாகவே இருக்கின்றது. அது 'ஹிந்து லா' வில் இன்னும் முடிவுக்கு வந்தில்லாத ஒரு செய்தியாகும். அவ்விஷயமாய் வக்கீல்மார்கள் அடிக்கடி, தம்மாலான வரையில் விடாப்பிடியாய் வாதுசெய்கின்றனர் (டாக்டர்கோர்—S).

### மத சுதந்திரம் பற்றி.

1. மாதர்களது மதசுதந்திரம்பற்றி மனு கூறுவது:- தன்கணவனுக்கன்றிப், பூசையையோ, வேண்டுதலையோ, விரதத்தையோ அனுஷ்டிக்ககூடாது. ஏனென்றால் ஒருமனைவி தன் கணவனுக்கு சிசுருஷை செய்தாலேயே அவள் சுவர்க்கத்தை அடைகிறாள் (அத். V. 155).

குறிப்பு:— மத அனுஷ்டான சுதந்திரமானது, மக்கள் வர்க்கத்தின் ஒவ்வொருவருக்கும், காற்று, வெளிச்சம், நீர், ஆகாரம் முதலிய அத்தியாவசியமான பொதுப்பட்ட பொருள் போல உளதாயிருக்க, அதுகூட ஹிந்து மாதர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

### ஒருபெண்ணை யார் கலியாணம் செய்துகொடுப்பது.

1. ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கும உரிமையானது கீழ்கூறப்படுகிறது: முதலாவது தகப்பன், இரண்டாவது தகப்பனுடைய தகப்பன், மூன்றாவது சகோதரன், நான்காவது தகப்பன் வழியிலுள்ள ஏனைய சொந்தக்காரர்கள்; 5-வது தாயார்.

ஆகவே, தாயானவள் தன்மகளைக் கலியாணம் செய்து கொடுக்கும் விஷயத்தில் சரியான உரிமையற்றவளாயிருக்கிறாள்.

### பரிபாலனம்பற்றி

1. ஒருவிதவையைப் பரிபாலனம் செய்வது, இறந்த புருஷனுடைய சொத்தில் வாங்கும் உரிமையைப் பொறுத்ததாகாது. ஜீவனாம்ச காரியமானது ஒரு கோர்ட்டுத் தீர்ப்பி

னாலோ, ஒரு ஒப்பந்தத்தினாலோதான் நிர்ணயிக்கப்படவேண்டும். ஆகையினாலே ஒரு கைம்பெண்ணுக்கு ஜீவனாம்சம் பெறுவது கூட நிச்சயமற்ற செயலாகவே இருக்கிறது. (S. 475).

2. கைம்பெண்ணாயிருக்கப்பட்டவள் தன் கணவனுடைய சொத்தில் ஒருசிறிது மட்டுமே அடைகிறாள். அப்பொருளுக்குக் 'கைம்பெண்சொத்து' என்று பெயருமாகும். அவள் தான் உரிமையாய்ப்பெற்ற பொருளிலிருந்துவரும் வருமான பாகத்திற்குமட்டும் தான் பாத்தியம் கொண்டாடலாம். அவள் பெற்ற சொத்தை தனக்கு உசிதம்போல விநியோகித்துக்கொள்ள அதிகாரம் உடையவளாயில்லை (Ss. 42/4).

அவளுடைய மரணத்துக்குப்பின், சொத்தானது அவளுடையவார்சுகளுக்குப் போகாமல், அவளுடைய புருஷனுடைய வார்சுகாரர்கட்கே (சொத்துரிமையாளர்கட்கே) போகிறது (S. 142, 144.).

3. ஒருஹிந்து தனக்கு மனைவியல்லாத பிறமாதரிடம் பிறந்த ஆண்குழந்தைகளைப் பரிபாலிக்கவும் கடமைப்பட்டிருக்கிறான் (S. 457/—A).

ஆனால், அவ்வகையில் பிறக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பரிபாலனம் உண்டென்று ஹிந்துச்சட்டத்தில் கூறியில்லை; ஆயினும், அத்தகைய பெண்குழந்தைகள் குற்ற நடவடிக்கைவிதிகள் (S. 458,) செக்ஷன் 488 பிரகாரம் தகப்பனிடமிருந்து பரிபாலனத்துக்கு உரிமைபெற இடம்பெற்றிருக்கிறார்கள்.

சொத்துரிமைபற்றி

1. ஹிந்துவாயிருக்கப்பட்ட ஒரு தகப்பன், தன் ஆண்மக்கள், மனைவி, ஏனையபாத்தியக்காரர் ஆகியோரது உரிமைக்கு விரோதமாய் அவர்கள் ஒன்றுமே அடையமுடியாதபடி செய்து, தன்சொத்தை விநியோகிப்பதை ஒருவரும் தடுக்கமுடியாது. அந்த சொத்தானது யாரேனும் ஒரு அன்னியருக்குக் கொடுக்கப்பட்டதென்பதே போதும் (S. 306/2 V).

2, விதிகளில் (S. 50) கூறப்பட்டிருந்தாலொழிய, ஒருபெண்ணாவது எந்தசொத்துக்கும் பாத்தியதை உடையவளாகமாட்டாள்

3 சாதாரணவிதிப்படி எச்சந்தர்ப்பத்திலும், மாதர்கள் பாத்திய முறையில், பூராஜீவிதங்களைப்பெறுவதில்லை. ஆனால் அவர்கள் அச்சொத்தை பிறர்யாருக்கேனும் விநியோகமாய் மாற்றிவிடத்தான் பாத்தியமுண்டு (S. 323 V). ஆனால், ஒருஆண்சொத்துக்கு வார்சுகாரனாக ஏற்படின் அவன் தான் அப்படி அடைந்த பூராஜீவிதத்தையும் தானே சொந்தமாக்கிக் கொள்ளலாம். (141 S.)

ஒரு மைனருக்குக்
கார்டியனாயிருப்பது பற்றி.

1. கீழ்ச்சொல்லப்பட்ட ஆசாமிகள்கீழ்ச்சொல்லப்பட்ட முறைப்படியே இயற்கையாக மைனர்கார்டியன்மாராகப் பாவிக்கப்படுகிறார்கள். (1) தகப்பன் (2) தாயார் (3) தகப்பன்வழி சொந்தக்காரர் (4) தாய்வழி சொந்தக்காரர் (S. 430).

இவ்வண்ணம் தகப்பனானவன், தாயாரைக்காட்டிலும் ஒரு மைனர் குழந்தைக்கு கார்டியனாகிவிட அதிக உரிமை பெறுகிறான். ஆனால் அக்குழந்தை எவ்வளவு இளமையாகவிருப்பினும் அதன் தாயார் கார்டியனாக இருக்க முடியாது. சிலசமயம் அநேக கொடுஞ்சித்தத்தகப்பன்மார் குழந்தைகளை அவற்றிற்குப் பால்தரும் தாயாரிடமிருந்து அதன் க்ஷேமத்திற்கு வழியில்லாமல் பிரித்து விடலாம்.

ஆனால், கோர்ட்டார், குழந்தையின் வயது, பருப்பு, சந்தர்ப்பங்களின் தன்மை இவற்றையெல்லாம் ஆலோசித்துத் தம் புத்தியை உபயோகித்துக் குழந்தையின் க்ஷேமத்தையெண்ணி, அது தாயிடம் ஒட்டியிருக்கும் காலம் வரையில், அதை அவளுடைய ஆதரவிலும், பாதுகாப்பிலும் விடுகிறார்கள்.

முகம்மதிய சட்டத்தை இச்சந்தர்ப்பத்தில் ஒப்பிடுங்கள். அச்சட்டம் இதற்கு அதிக இரக்கமுடையதாயும், அதிக யோசனைபெற்றதாயும் தோன்றும். அது மைனர் குழந்தைகளின் பரிபாலனத்தை அவர்களின் க்ஷேமத்திற்காக, அவர்களுடைய தாயாரிடமே விடுகின்றது. ஏனென்றால், தகப்பன்மாரிலும் தாய்மார் இயற்கையினாலேயே முதலாவது கார்டியன்மாராக ஆகின்றனரென்பதே. முகம்மதிய லா பிரகாரம், தாயானவள் தன் ஆண்குழந்தைகளினுடைய கார்டியனாக அவை 7 வது வயது ஆகும்வரை இருக்கவேண்டும். அவள், பெண் குழந்தைகளினுடைய கார்டியனாக, பெண்கள் பதினைந்தாம் வயதை அடையும் வரையில் அல்லது பருவமடையும் வரை இருக்க வேண்டும். அந்த தாயானவள் தன் புருஷனால் விவாகரத்து செய்யப்பட்டவளாயிருந்தபோதிலும் இந்த உரிமையை இழந்து விடுவதில்லை.

ஸ்வீகாரம் செய்வது பற்றி.

1. ஒரு மனைவியோ ஒரு விதவையோ தான் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் காரியம் பற்றித் தன் கணவனிடமிருந்து உறுதியாக அதிகாரம் பெற்றிருந்தாலன்றி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உரிமை கிடையாது (S. 367).

2. தத்து எடுத்துக் கொள்ளுகின்ற மனிதன் கலியாணம் செய்து கொள்ளாதவனாயினும் சரி, தாரமிழந்தவனாயினும் சரி, அல்லது, அவனது மனைவி கர்ப்பமாக இருந்தாலும் சரி, அந்த கர்ப்பவதி தன் புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவதை எதிர்ப்பினும் சரியே, அதையெல்லாம், அவன் தத்தெடுத்துக் கொள்ளுங்கால் லக்ஷியம்செய்ய வேண்டியதில்லை (டாக்டர் கோர், S 571)

ஒரு ஆண் தானே தன் மகனை ஸ்வீகாரமாக கொடுத்துவிடலாம். தாயானவள் அதற்கு ஆக்ஷேபித்தாலும், ஹிந்து லாவின் முன்னிலையில் தகப்பன் தன் மகனைப் பிறருக்கு ஸ்வீகாரமாய்க் கொடுத்திட உரிமை உண்டு. (டாக்டர் கோர் S. 674).

---

பழத்தினால் மரத்தைத் தெரிந்து கொள்வது போல, ஒரு ஜன வகையாரினுடைய நாகரீகப்பயிற்சியின் அளவை அவர்களது பழக்கங்களையும் ஒழுக்கங்களையும் கொண்டு, புரிந்து கொள்ளலாம். ஹிந்து லாவில் மனிதரது உரிமைகள் யாவும் பெருந்த ஜாக்கிரதையுடன் காப்பாற்றப்பட்டு வந்திருக்கையில், மாதர்களது உரிமைகளைக் காப்பாற்ற ஒருவிதமான விதிமுறையும் வகுக்கப்பட்டில்லையென்பதைக் காண வருத்தம் தருவதாகவிருக்கிறது.

நம் இந்திய சகோதரிகள் அநேக நூற்றாண்டுகளாக மகா கொடுமையான சமூக அக்கிரமத்தையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் எவ்வளவு பேர் நாம் நம் தாய்மார்கள், சகோதரிகள், பெற்ற பெண்கள் முதலியவர்களிடம் பொருத்தமில்லா வழியிலும் ஞாயமில்லாமலும், நடந்துகொண்டிருக்கின்றோமென்பதை உணர்கிறார்கள்? அப்பெண்மக்கள் இத்தேசத்தையும் இத்தேச மக்களையும் உருப்படுத்துகின்றவரல்லரோ? இவ்விஷயத்தில் அந்தரங்கமென்ன வென்றால், ஹிந்து மதப்பிரகாரம், ஒரு ஸ்திரீயானவள் ஒரு கைப்பொருள் போலவோ, ஒரு மனிதனிலும், புத்தியிலும்நன்னடக்கையிலும் தாழ்ந்தவளாகவோ கருதப்பட்டுவருகிறாள். ஆதலால் ஹிந்துசாத்திரங்கள் அவள் செய்யவேண்டிய கடமைகளில்மட்டும் அழுத்தமாக குறிப்பிடுகின்றனவே யொழிய, அவளுக்குரிய உரிமைகளில் ஒன்றுமே பேசுவதில்லை. இம்மாதிரியாக நாம் ஹிந்துசமூக அமைப்பில் ஒருஸ்திரீயானவள் முக்கியாம்சமானவளல்லவென்பதையே நினைக்கும்படி செய்யப்படுகின்றோம்.

பண்டைக்காலத்திய ஞானிகள் எப்படி அத்தகைய கொடுமைகளை எழுதியிருக்கக்கூடும் என்று புரிந்துகொள்ளமுடியவில்லை. யாரொருவர் ஹிந்துசாத்திரங்களை ஆராய்கின்றாரோ, அவர் ஆண்களுக்கு ஒருசட்டமும் பெண்களுக்கு ஒருசட்டமும் இருப்பதைக்கண்டு வியப்பெய்துவர், 'மனிதரைப் போன்று மாதருக்குக்கூட சாந்தி உண்டு பண்ண நிலைமை வகுக்காதவர்கள், சாந்தி, சாந்தி என்று ஒவ்வொரு ஜீவனிடத்தும் கூவுகின்றனரே!,'யென்று ஒருவர் நன்றாய்க் கேட்கலாம்.

ஒரு ஸ்திரீயின் ஜீவியகாலம் முதற்கொண்டு முடிவுவரையில், ஒழியாத துன்பங்களும் துயர்களுமே இருக்கின்றன. அவள் ஒவ்வொருநாளும் செய்யவேண்டிய சின்னஞ்சிறு காரியங்களாகிற, உண்ணல், பருகல் விழித்தல், உறங்கல், குளித்தல், பூசித்தல், வீட்டுக்குவெளியில் பயிற்சி முதலிய செய்தல் ஆகியவற்றில்கூட மனிதனின் இரக்கத்திற்கே ஆள் ஆகிறாள். மனிதனோ சாஸ்வதமாகவே சகல மரியாதைகளையும் தானே பெறுபவனாகிக், கடவுளுக்குச் செய்யப்படும் பூசையையும்கூட தான்மட்டுமே செய்துகொள்ள உரிமைபெற்றவனாக ஆகிறான்.

ஆனால், எல்லாவற்றிலும் விபரீதம் என்னவென்றால், அவ்வளவு தீமைகள் நம்மிடையே நிலவுகின்றனவாயிருக்க, நம்முடைய பேச்சுக்காரர் பலரும், நமது பத்திரிகைகளும், இன்னமும், இந்தியாவிலுள்ள பாமர ஜனங்களுடைய உண்மையான நிலைமையையும் எளிய மாதர்களினுடையவும் நிலைமையையும் மூடிவைத்தே வருகின்றதுடன், நம் சமூக நிலைமையிலுள்ள ஆபாசநிலைமைகளையெல்லாம் வெளிகாட்டார் உணாமுடி

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

# இந்து கடவுள்கள்.

## 2. சுப்பிரமணியனது பிறப்பு.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

விஸ்வாமித்திரன் சுப்ரமணியனது பிறப்பைப்பற்றி ராமனுக்குக் கூறியது:—

1. சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணஞ்செய்து, மோகங்கொண்டு அவளுடன் 100 தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்துகொண்டிருந்தனர். அவ்வளவுகாலம் கழிந்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை. அதுகண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, "இவ்வளவுகாலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ்ஸாகிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்க மாட்டாது. உம்முடைய விந்துவை தயவுசெய்து விடாமல் நிறுத்திக் கொள்ளும்" என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றப்படி யார் தரிப்பது? எங்கு விடுவது? என்று கேட்க, தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப்படியே சிவன் பூமியின்மீது விட்டுவிட்டார். பூமி அதை தாங்கமாட்டாமல் பூமி முழுதும் கொதிகொண்டு எழ தேவர்கள் அந்த வீரியத்தை பூமி தரிக்க முடியாது எனக் கருதி அக்கினியிடம் சென்று வேண்ட அக்கினி வாயுவின் உதவியால் அவ்வீரியத்திற்குள் பிரவேசித்து பிரமதேவன் கட்டளைப்படி அதை கங்கையில் கொண்டு சேர்த்து, அவ்வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தை பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ்வீரியத்தைப் பெற, அவ்வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட, கங்கை அதை தாங்கமாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி "ஏ கங்கையே! நீ அடைந்த சிவனின் வீரியத்தை தாங்க முடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டுவிடு" என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தை பனிமலையின் அருகில் விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற, அதை இந்திரன் பார்த்து அக்குழந்தைக்கு பால் கொடுத்து வளர்க்க கிருத்திகா தேவிகளை ஏவ, அவர்கள் அதற்கு பால் கொடுத்து வளர்த்து வரலானார்கள். பல இடத்தில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக்குழந்தை உற்பத்தியானதால் அக்குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும், கிருத்திகா தேவிகள் ஆறு பேர்களுடைய பால்சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும், மேல்கண்ட ஆறு பேரின் முலையிலும் ஆறுமுகம் கொண்டு ஏககாலத்தில் பால் குடித்ததால் ஷண்முகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் "சிவன் பார்வதியை புணர்ந்தது" என்று தலைப்பெயர்கொண்ட 36 வது சருக்கத்திலும் "குமாரசாமி உற்பத்தி" என்கின்ற 37 வது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்கு தகுந்த சக்திகொண்ட ஒரு குழந்தையை பெற்றுத்தரவேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது ஐந்து முகங்களுடன் மற்றும்ஒரு முகத்தையும் சேர்த்துக் கொண்டு தோன்ற அவ்வாறு முகங்களில் உள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப்பொறிகளைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் நடுங்கி பரமனைவேண்ட, பரமன் அப்பொறிகளை கங்கையில் விடும்படி சொல்ல அவர்கள் அப்படியேசெய்ய, கங்கை அது தாங்கமாட்டாமல் அவைகளைக்கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறுகுழந்தைகள்தோன்ற, அந்த ஆறுகுழந்தைகளையும் கிர்த்திகைப் பெண்கள் அறுவர்களும் பால்கொடுத்து வளர்த்துவந்தார்கள். பிறகு சிவன் பெண்ஜாதி பார்வதிதேவி இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டுப் பாலூட்டுகையில் அவ்வாறு குழந்தைகளும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரேகுழந்தையாக ஆகிவிட்டது. இதற்கு ஆறுமுகமுடையதால் ஆறுமுகன்என்றும் கங்கையாறு ஏந்திச்சென்றதால் காங்கேயன் என்றும் சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும் முருகன்கதையிலும் உள்ளது.

குறிப்பு:—சுப்பிரமணியன் பிறப்புக்கு மேல்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும் கந்தபுராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே வால்மீகி ராமாயணத்தில் விஸ்வாமித்திரர் ராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேல்கண்ட கதைதான் உறுதியாகின்றது. ஏனெனில் கந்தபுராணத்திலும் பார்வதியானவள் தன்மூலியமாய் பிள்ளைபெறுவதை தடுத்ததற்காக தேவர்கள்மீது கோபித்து தேவர்களை "பிள்ளையில்லாமல்போகக்கடவது" என்று சபிக்கின்றாள் என்று காணப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில் பார்வதிக்கு தேவர்களிடத்தில் கோபமுண்டாகக்காரணம் ஏற்பட நியாயம் இல்லை. இந்தக்கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகிராமாயணத்தில்சொல்வதுபோல், அதாவது 100 தேவவருஷம் சிவன் பார்வதியைப்புணர்ந்துகடைசியாக வீரியம் வெளிப்பட்டு கருதரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு சிவனை தனது வீரியத்தை பார்வதி கர்ப்பத்திற்குள் விடாமல் நிறுத்திக்கொள்ளும்படி வேண்டினதால் சிவன் அதை எடுத்துக்கொண்டதற்கு பார்வதி கோபித்து வீரியம் ஸ்கலிதமாகும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச்சபித்தது, அதாவது தன்னைப்போலவே தேவர்களுடையபெண்சாதிகள் எல்லோரும் பிள்ளையில்லாமல் மலடிகளாகவேண்டுமென்று சபித்ததாகக் காணப்படுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும் பார்வதி தனது கர்ப்பத்தில் விழவேண்டிய வீரியத்தை பூமி பெற்றுக் கொண்டதால் பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும் (பூமியையும்) பலபேர் ஆளவேண்டுமென்று சபித்ததாகவும் அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் ,என்றும் வால்மீகியில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக்கின்றது.

கந்தப்புராணமோ மேல்கண்ட சிவன் 100 வருஷம்புணர்ந்தவிஷயம் ஒன்றைத்தவிரமற்றவைகளையெல்லாம்ஒப்புக்கொள்ளுகின்றது.

ஆகவே சுப்பிரமணியன் என்றும் சண்முகன் என்றும் கார்த்திகேயன் என்றும் ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேல்கண்டமாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உள்பட்டதுஎன்பதுவைணவப்புராணங்களிலும் சைவப்புராணங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி இந்த சுப்பிரமணியனுடைய கடவுள் தன்மையையும் செய்கைகளையும் வேறு தலைப்பின் கீழ் விரிக்கலாம்.

---

## திண்டுக்கல்லில் விதவா விவாகம்,

இவ்வூர் மேட்டுராஜப்பட்டியில் வசிப்பவரும், தற்சமயம் பழனி முன்சிப் கோர்ட்டில் வேலை பார்த்து வருபவருமான திருவாளர் வி. லட்சுமண நாயுடு என்பவர் நேற்று 27-8-28உ புதன்கிழமை யன்று இவ்வூர் மகா-௱-௱-ஸ்ரீ பால்சாமி செட்டியாரவர்கள் சத்திரத்தில், தம் உறவினருள் விதவையாயிருந்த சுமார் 14 வயதுடைய அங்கம்மாள் என்ற ஒரு பெண்ணை விவாஹம் செய்து கொண்டார். ஷை முகூர்த்தத்திற்கு ஷையாரின் பந்துக்கள் அனைவரும் அநேக பிராமணர்களும் இன்னும் டவுனிலுள்ள அநேகரும் விஜயம் செய்து முகூர்த்தத்தை நடத்தி வைத்தார்கள். அது சமயம் முனிசிபல் கவுன்சிலரும் வக்கீலுமான ம-௱-௱-ஸ்ரீ ஆர். ராமசாமி நாயுடு அவர்கள் அங்கு விஜயம் செய்திருந்த எல்லோருக்கும் முன்பாக இந்த கல்யாணத்தைப் பற்றி விரிவாக எடுத்துச்சொல்லி சுமார் 1/2 மணி நேரம் பேசிவிட்டு, பெண் மாப்பிள்ளை இருவரையும் ஆசீர்வதித்தார். முறையே தம்புசாமி நாயுடு அவர்களும் மகா-௱-௱-ஸ்ரீ சிவராமகிருஷ்ணய்யரவர்களும் ஷை விஷயமாய் ராமசாமி நாயுடு அவர்கள் பேசியதை ஆதரித்துப் பேசி பெண் மாப்பிள்ளை இருவரையும் ஆசீர்வதித்தார்கள். பிறகு எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது. வந்திருந்த பந்துக்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் விருந்தளிக்கப்பட்டது. சாயந்திரம் பெண் மாப்பிள்ளையுள்பட வீடுவந்து சேர்ந்தார்கள். வந்திருந்தவர்கள், மிக்க தைரியமாகச் செய்த இவ் விதவாவிவாகத்துக்காகமாப்பிள்ளையை விசேஷமாக மெச்சி பேசிக்கொண்டார்கள். நானும் இன்று கேள்விப்பட்டு மாப்பிள்ளை வீட்டில் போய் தாம்பூலம் வாங்கிவந்தேன்.

எ. எஸ். முருகேசம் பிள்ளை.

---

## சிக்கல், பொருள்வைத்த சேரி, சுயமரியாதைத் திருமணம்.

விபவ-ஆண்டு ஆவணித்திங்கள் 11-ம் நாள் 26-8-28உ காலை 9-30 க்குமேல் 11 க்குள்ளாக ஷை யூர் திரு. சித. அண்ணாமலை முதலியாரவர்கள் குமாரன் கோவிந்தசாமிக்கும் ஷை யூர் திரு. சொக்கலிங்க முதலியாரவர்கள் குமாரி அமிர்தவல்லிக்கும் சமூகப்பெரியாரைக் கொண்டு எவ்வித சடங்குமில்லாமல் சுயமரியாதை முறையில் வெகு சிறப்பாய் திருமணம் நடந்தேறியது.நா, நாகப்பன்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஹூ ஆவணி மீ 18-உ

## திரு. வேதாசலம்.

திரு. வேதாசலம் அவர்கள் சென்னை பாலசுப்பிரமணிய பக்த சபை ஆண்டு விழாவில் தலைமை வகித்து நிகழ்த்திய தலைமைப் பேருரையில் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரைப் பற்றியும் வசை மொழிகளும் கடு மொழிகளும் மொழிந்ததாகவும் அதுபற்றி அதுசமயம் அங்குற நேர்ந்த திருவாளர்கள் கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, ராமநாதன், ஆகியோர்களுக்கும் திரு. வேதாசலம் அவர்களுக்கும் வாக்குவாதப் போர் நடந்ததாகவும் "திராவிடன்" முதலிய பத்திரிகைகளில் காணப்பட்டதோடு பல நிரூபர்களும் நமக்கு எழுதி வந்தார்கள்.

ஆகிலும் திரு. வேதாசலம் அவர்கள் தமிழ் நாட்டில் செல்வாக்கும்மதிப்பும் பெற்ற பண்டிதர் என்பதாக நாம் கருதி வந்ததால் பத்திரிகைகளிலும் நிரூபங்களிலும் கண்டவற்றிற்கு சமாதானம் எழுதுவது என்பது நமக்கு சற்று சங்கடமாகவே இருந்தது. ஏனெனில், முதலாவது, இவ்வளவு மோசமாக அவர் பேசியிருப்பாரா என்பது. இரண்டாவது, அப்படியே பேசிஇருக்கலாமென்றாலும் அது அவர்மனதாரப்பேசியதாக இருக்காது என்பதும் மற்றபடி ஏதோ சமய சந்தர்ப்பங்கள் இம்மாதிரி பேசவேண்டிய நிலைக்கு அவரை கொண்டுவந்து விட்டிருக்கலாம் என்றும் கருதியதோடு இதை அனுசரித்து திரு. வேதாசலம் அவர்களிடமிருந்து ஏதாவது ஒரு தகவல்கிடைத்தால் அதை ஆதாரமாகவைத்தே அவ்விஷயங்களை நழுவ விட்டுவிடலாம் என்றும் கருதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதுபோலவே திரு. வேதாசலம் அவர்களுக்கும் நமக்கும் பொதுவான இரண்டொருநண்பர்கள், நாம் மேலே நினைத்த இரண்டு விதமாகத்தான் விஷயம் நடந்திருக்குமென்றும் அதற்காக திரு. வேதாசலம் அவர்கள்கூட சற்று வருத்தப்பட்டாரென்றும் அப்படி இருந்தாலும் இனி அதைப்பற்றி கிளறாமல் அப்படியே விட்டு விடுவது எல்லோருக்கும் நன்மை பயப்பது என்றும் சொன்னார்கள். அதை ஆதாரமாய் வைத்து ஒரு சிறு குறிப்புடன் அவ்விஷயத்தை முடித்துவிடலாம் என்றே இருந்தோம்.

ஆனால் அடுத்த ஒன்று இரண்டு வாரம் திரு. வேதாசலம் அவர்களின் சிஷ்யர்கள் பெயரால் பல துண்டு பிரசுரங்கள் திரு. வேதாசலம் அவர்கள் பேசியதாகக் காணப்பட்டவைகளை மறுக்கின்றது போலவும் மற்றும் சில துவேஷங்கொண்ட வார்த்தைகளுடனும் வெளியாக்கப்பட்டன. மற்றும் சிற்சில இடங்களில் அவர் பேசியதுபோலவே நமது இயக்கத்தை தாக்கியும் விஷமப்பிரசாரங்கள் செய்யப்பட்டும் வந்ததாகவும் தகவல்கள் கிடைத்தன. இந்நிலையில் நாம் எவ்வித சமாதானமும் சொல்லாமல் ஒளிந்து கொள்ளுவது சரி அல்ல என்று தோன்றியதுடன் நமது நண்பர்கள் பலரும் தூண்டியதுடன் பல நிரூபங்களும் வந்தவண்ணமாய் இருந்தன.

இந்நிலையில் நாம் ஏதாவது சமாதானம் எழுதித் தீரவேண்டியதாகவே ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் எழுத மனமும் இசையவில்லை, கையும் ஓடவில்லை.

ஏனெனில் நமக்கு அவரது பெயரைக் கேட்க நேரிட்ட சமயம் முதலே அவரிடம் (காரணம் சொல்லமுடியாது) ஒருவித விஸ்வாசம்ஏற்பட்டதுடன் நமது நண்பர்களிடம் அவரைப்பற்றி பேசநேர்ந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் நமது உணர்ச்சிகளுக்கும் கொள்கைகளுக்கும் அவர் ஒரு உற்றதுணைவராயும் பின்பலமாகவும் இருக்கின்றார் என்பதாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதுமாகவே இருந்துவந்ததால், இச்சமயம் யாராவது மத்தியில் அவரது மனதைவிஷப்படுத்தி இருக்கலாமோஎன்கின்ற எண்ணம்தோன்றியதனால்தான் மறுபடியும் ஒருமுறை "திரு.வேதாசலம்அவர்களின்சமாதானம்வரவில்லை; ஆதலால் அடுத்தவாரம்எழுதப்படும்" என்று எழுதி எதிர்பார்த்துக்கொண்டு இருந்தோம். பிறகு சென்றவாரம் ஒருசமாதானக் கடிதம் நண்பர் திரு. விஸ்வநாதம்பிள்ளை அவர்கள்மூலமாய் திரு. வேதாசலம் அவர்கள் எழுதி அனுப்பியது கிடைத்தது, அதில் எழுதப்பட்டிருந்தது என்ன என்பதுபற்றிக்கூட நாம்கவனிக்க இஷ்டப்படவில்லை. தவிர அவர் எப்படி எழுதவேண்டும்என்றுகூட நாம்நினைத்ததும் கிடையாது. ஏனெனில் ஏதாவது ஒரு வழியில் அச்சம்பவத்தை மறக்கவேண்டும் என்கின்ற கவலையே ஒழிய வேறில்லை. அக்கடிதமானது நண்பர் திரு. விஸ்வநாத பிள்ளை அவர்களால் தப்பாய் வினியோகிக்கப்பட்டதால் அது "திராவிடன்" பத்திராதிபரிடம் போகவும் அவர் அதை "மன்னிப்புக் கடிதம்" என்கின்றதாக பெயர் கொடுத்து பிரசுரிக்கவும் நேர்ந்தது நமக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது என்றாலும் அதன் குற்றத்தையும் நாமே ஏற்றுக் கொள்ளுகின்றோம். ஏனெனில் ஒரு விஷயத்தில் நமது நண்பர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமானபொறுப்பு இருக்கும் என்று நினைத்துக்கொண்டு நண்பர்களிடம் பழகுவது எப்போதும் சரியாகவே இருப்பதில்லை. ஆதலால் அக்குற்றத்திற்கு நாம் பொறுப்பாளி ஆவதுடன் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இனிமேலாவது நமது நண்பர்களும் துணைவர்களும் இம்மாதிரி நடந்துகொள்ளாமல் இருப்பதற்காக நாம்விலைகொடுப்பதின் பொருட்டு நம்மையேநாம் தண்டித்துக்கொள்ளக் கருதி "திராவிடன்" பத்திரிகையில்

"மறைமலை அடிகள் மன்னிப்புக்கடிதம் அனுப்பியுள்ளார்" என்கின்ற வார்த்தை காணப்பட்டதற்காக நாம் நிபந்தனையில்லாமல் திரு வேதாசலம் அவர்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அன்றியும் அக்கடிதத்தில் அவ்வளவுகூட இல்லாமல் இன்னமும் எவ்வளவு சாதாரணமாய் எழுதியிருந்தாலும்கூட அதை ஒரு சாக்காகக்கொண்டே அவர் பேசியதைப்பற்றிய விவகாரத்தை நிறுத்தியேயிருப்போம்என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மற்றபடி அபிப்பிராய பேதத்தைப்பற்றிய விஷயத்தில் அவர் எவ்வளவு இணங்கி வருவதாயினும் நாம் நமது கொள்கையிலோ அபிப்பிராயத்திலோ ஒரு சிறிதளவுகூட விட்டுக்கொடுக்கவோ, திரு வேதாசலத்தினுடையவோ அல்லது வேறு யாருடையவோ நட்பைக் கருதியானாலும் கடுகளவு மாற்றிக்கொள்ளவோ நாம்சிறிதும் தயாராயில்லை. ஏனெனில் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்களின் உழைப்புகள் பலன் தராததற்கு காரணமே இவ்விட்டுக்கொடுக்கும் தன்மையும் தாக்ஷண்ணியமும் ராஜதந்திரச்செய்கையும்தான் என்பது நமது முடிவு.

இன்றுகூட நமது இயக்கத்தின் எதிரிகளும் சில சுயநலக்காரர்களும் 'மகாத்மா காந்தி இப்படியா சொன்னார்" "சுவாமி விவேகானந்தர் அப்படியா சொன்னார்" "திருவள்ளுவரைவிடவா இவர்கள் புத்திசாலிகள்?" "பெரிய புராணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் மேலாகவா இவர்கள் தத்துவம் இருக்கின்றது?" என்கின்றதுபோன்ற பலசமாதானங்களையும் பாட்டிகதைகளையும் சொல்லுவதை நாம்பார்க்கின்றோம்; கேட்கின்றோம். ஆனாலும் இப்படி சொல்லப்படுபவைகள் ஏமாற்ற உபயோகப்படுகின்றனவேயன்றி காரியத்தில் ஏதாவது பலனுண்டா என்று கேட்கின்றோம்.

ஜாக்கிரதையாகவும் ராஜதந்திரமாகவும் பேசியதால் பார்ப்பார்கள் தயவுசற்று கிடைத்தது. அதனால் பெரியோர்கள் என்றும் பூசிக்கத்தக்கவர்கள் என்றும் சொல்லிக்கொள்ள நேர்ந்தது. அவர்களுக்கு சரித்திரங்களும் படங்களும் உலவுகின்றன. ஆனால் மக்கள் உண்மை அறிந்துகொள்ள முடியாமல் "பெருமாள் பெத்தபெருமாளானது" போல் "மகாத்மா காந்தியும் சுவாமி விவேகாநந்தருங்கூட பார்ப்பனர்களையும் புராணங்களையும்புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள்; அவர்களுக்கு நன்றிசெலுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்கள்" என்று இன்றும் பலர் எடுத்துப்பேசி பார்ப்பனர்கள் காலுக்குள் போய் புக இடங்கிடைத்ததல்லாமல்

மற்றபடி ஆனகாரியம் இன்னதென்பது விளங்கவில்லை.

அதுபோலவே, சைவ வைணவபுராணங்களிலும் "பறைபரிலே நந்தன் திருநாளைப்போவார் ஆனார்; பள்ளரிலே பாணன் திருப்பாணாழ்வார் ஆனார்" என்று சொல்லுவதாலும் நமக்கென்ன பலன் உண்டு என்று கேட்கின்றோம்.

திருநாளைப்போவார்என்று ஒரு கல்லுருவமும் திருப்பாணாழ்வார் என்று ஒரு கல்லுருவமும் செய்து அறுபத்து மூவர் என்கின்ற அறுபத்து மூன்று கல்லுருவங்களோடு சேர்த்தும் பன்னிரண்டாழ்வார் என்கின்ற பன்னிரண்டு கல்லுருவங்களோடு சேர்த்தும் நட்டு வைத்து அதற்கு பொங்கலும் புளியோதரையும் வைத்து பூசை பண்ணி பார்ப்பான் சாப்பிட்டுவிட்டதினாலேயே பறையர் என்பவர்களும் பள்ளர்கள் என்பவர்களும் "ஈன ஜாதிக்காரர்கள்" என்று சொல்லப்படுவதும் மறைந்து போயிற்று? அல்லது அந்த சாமிகளைச் சேர்ந்த ஆசாமிகளுக்காவது அந்த கல்லுருவத்தைப் பார்க்கவாவது இடம் கிடைக்கின்றதா என்று கேட்கின்றோம்.

இந்த சாக்கைச் சொல்லிக்கொண்டு புஸ்தகக் கடைக்காரன் புஸ்தகம் அச்சுப் போட்டு பணம் சம்பாதிக்கவும், புராணப் பிரசங்கக்காரர் பிரசங்கம் பண்ணி பணம் சம்பாதிக்கவும் பார்ப்பான் பூசை உற்சவம் செய்து பணம் சம்பாதிக்கவும் உபயோகப்பட்டதேயல்லாமல் மற்றபடி அவைகளால் விளைந்த நன்மை என்னவென்று கேட்கின்றோம்.

முடிவாக திரு.வேதாசலம் அவர்களுக்கும் அவரது குழாத்தினர்களுக்கும் ஒன்றுசொல்லுகின்றோம். அதாவது நாமும் நமது இயக்கமும் புராணங்களுக்கும் அப்புராணங்களில் காணப்படும் சமயங்களுக்கும் அச்சமயத்தில் காணப்படும் சமய ஆச்சாரிகளுக்கும் அச்சமய ஆச்சாரிகளால் காணப்படும் சாமிகளுக்கும் அச்சாமிகளது பெண்டு பிள்ளைகளுக்கும் வெளிப்படையான விரோதிகள்தான். இதில் ஒளிமறைவு ஒன்றும் இல்லை என்பதோடு "இதற்கு அப்படி அருத்தம்" "அதற்கு இப்படி அருத்தம்" என்கின்ற பண்டிதப் புரட்டுகள் ஒன்றும் இனிகூடாது என்றும் கண்டிப்பாய்ச் சொல்லுகின்றோம்.

இதைப்பற்றி எச்சமயவாதியாயினும் எப்பண்டிதரானாலும் செய்யும் அறப்போருக்கும் அறிவுப் போருக்கும் தலைகொடுக்க மகிழ்ச்சியுடன் தயாராயிருக்கிறோம்.

அதை விடுத்து குறுக்குவழியில் வஞ்சகப்போருக்கும் மூட நம்பிக்கைப் போருக்கும் தலைகொடுப்பதானால் சற்று சங்கடமாகத்தான் இருக்கின்றது. ஆயினும் வேறுவழியில்லாவிட்டால் அதையும் வரவேற்க வேண்டிய நிர்ப்பந்தத்திலேதான் இருக்கின்றோம்.

---

## திரு வேதாசலம் அவர்களின் கடிதம்

பல்லாவரம் திரு. வேதாசலம் அவர்கள் திரு. ஈ. வே. இராமசாமி நாயக்கருக்கு திரு விஸ்வநாதம் பிள்ளை அவர்கள் மூலம் எழுதிய கடிதம்:—

அன்புள்ள ஐயா,

நலம். தங்கள் நலத்தைத் தெரிவித்தல் வேண்டும். என்னைப் பற்றிய ஒரு குறிப்பு 'குடி அரசு' பத்திரிகையில் வெளிவந்திருப்பதாக திருச்சி திரு. விஸ்வநாத பிள்ளை வாயிலாக இன்று அறிந்தேன். சென்னை சுகானந்த நிலையத்தின் ஆண்டுவிழா நிகழ்ச்சி முறையைப்பற்றித் 'திராவிடன்' 'தமிழ்நாடு' பத்திரிகைகளிற் போந்துள்ள சிலவுரைகளை நம்பி, அக்குறிப்புத் தங்களால் வரையப்பட்டதென அறிகின்றேன். தங்களுக்காவது, தங்கள் இயக்கத்தைச் சார்ந்த அன்பர்கட்காவது எவ்வகையான தீங்கும் செய்ய அல்லது செய்விக்க வேண்டுமென்று யான் எண்ணியதுமில்லை, யாண்டும் சொல்லியதுமில்லை. தாங்கள் என்னை வேறாக நினைத்து என்மீது வருந்துதல் வேண்டாம். என்றாலும், கடவுளைப்பற்றியும் அடியார்களைப் பற்றியும் தாங்கள் கொண்டுள்ள கோட்பாடுகளில் மட்டும் யான் கருத்து உடன்பாடுடையேனல்லேன். பத்திரிகைகளில் வெளிவந்த சிலவற்றைப் பார்த்து தாங்கள் வருந்தியிருந்தால், அவ்வருத்தத்தை தாங்கள் அன்பு கூர்ந்து நீக்கிவிடல் வேண்டும். தமிழ்மக்கள் முன்னேற்றத்தின் பொருட்டுத் தாங்கள் செய்துவரும் நன் முயற்சிகள் இனிது நடைபெறுக.

அன்புள்ள,

24-8-28. சு. வேதாசலம்.

---

## வடநாட்டுக் கடவுள்கள்.

—0—

கடவுள்கள் என்பது ஒவ்வொரு நாட்டுக்கொவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு ஊருக்கு ஒவ்வொரு விதமாகவும் இருந்துவருகின்றன. சாதாரணமாய் இந்தியாவிற்கே பிரதான "புண்ணிய பூமிகளான" காசி, ஜகநாதம், பண்டரிபுரம் முதலிய க்ஷேத்திரங்களிலுள்ள சாமி கோவில்களில் யார் வேண்டுமானாலும் உள்ளே சென்று சாமியைத் தொட்டு பூசை செய்யவும், கட்டி அழுது தனது குறைகளைச் சொல்லிக் கொள்ளவும் உரிமைபெற்ற சாமிகளாகவே இருக்கின்றன. ஆனால் தென்னாட்டிலோ அதே சாமிகளைத் தொடாதபோதிலும் கிட்டப்போய் கும்பிட்டாலும் அல்லது சிலர் கோவிலுக்குள்ளே புகுந்துவிட்டாலும் உடனே அச்சாமிகள் செத்துப்போய்விடுகின்றன. ஆனால் பார்ப்பானுக்குப் பணமும் சோறும் கொடுத்தால் மறுபடியும் அவைகள் உயிர்பெற்று விடுகின்றன, எனவே நமது தென்னாட்டுச் சாமிகளின் சக்திகள் கூட நமதுபார்ப்பனர்களிடம் எவ்வளவு அடிமைப்பட்டுக்கிடக்கின்றன என்பது கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

இப்போது மத்திய மாகாணத்தில்வார்தா வென்னுமிடத்தில் உள்ள சாமிகள் காசி முதலியவைகளிலுள்ள சாமிகளைப்போலவே தங்கள் சக்தியை பிராமணனிடமிருந்து விடுதலை செய்துகொண்டதாகத் தெரியவருகின்றது. அதாவது, வார்தாவில் உள்ள லக்ஷ்மி நாராயணசாமி கோவிலுக்குள் தீண்டாதவர்கள் எனப்படுபவர்கள் போய் கும்பிடலாம் என்று அங்குள்ள மக்கள் தீர்மானித்து அந்தப்படியே இந்த ஒரு வாரமாக எல்லோரும் உள்ளேபோய் கும்பிட்டு வருகிறார்களாம்.

இதுவரை அந்தக் கோவிலில் உள்ள ஒரு சாமிகூட சாகவில்லையாம். இன்னும் சில இடங்களிலும் இதுபோலவே நடைபெற்றும் வருகின்றதாம்.

ஆனால் நம் தென்னாட்டு சாமிகளுக்கு மாத்திரம் பார்ப்பனர்கள் கையிலிருந்து தப்பிக்க இன்னும் சக்தியேற்படவில்லை என்கின்றதானது நமக்கு மிகவும் வெட்கக்கேடான காரியமாய் தோன்றுகின்றது.

"கடவுள் நெறியையும், கடவுள் தன்மையையும் ராமசாமி நாயக்கனும் சுயமரியாதைக் கூட்டத்தாரும் பாழாக்குகின்றார்கள்" என்று சொல்லுவதற்கு மாத்திரம் நமது நாட்டில் ஆட்கள் ஏராளமாய் இருக்கின்றார்களேயொழிய மற்றபடி இக்கூட்டத்தாருக்குள் பார்ப்பானைத்தவிர கடவுள்களின் கோவிலுக்குள்ளே மற்றவர் போனாலும் அதைத் தொட்டாலும் கடவுள் செத்துப்போவார் என்கின்ற கொள்கை கடவுள்தன்மைக்கும் கடவுள் நெறிக்கும் ஏற்றதா என்பதை ஒருவராவது கவனிக்கின்றாரா என்று பார்த்தால் அடியோடு இல்லையென்றேதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இனியாவது நமது தென்னாட்டுக் கோவில்களின் நிர்வாகிகள் கவனித்து தங்கள் தங்கள் நிர்வாகத்திலுள்ள கோவில்களில் இருக்கும் கடவுள்களை பார்ப்பன அடிமைத் தனத்திலிருந்து வடநாட்டு சாமிகளைப்போல விலக்கி சுதந்திரமுள்ள சாமிகளாகவும் எல்லோருக்கும் சமமான சாமிகளாகவும் இருக்கத் தக்கதான நிலையில் இருக்கும்படி செய்வார்களா என்று கேட்கின்றோம்.

## திருவாளர்
## ஆர். கெ. ஷண்முகம் செட்டியார்.

திருவாளர் ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தமது மேல்நாட்டு யாத்திரையை முடித்துக்கொண்டு சுகமே வந்து சேர்ந்ததற்கு வாழ்த்துக்கூறுகிறோம்.

---

## சுயமரியாதை பிரசாரக் கமிட்டி.

சுயமரியாதை பிரசாரக் கமிட்டியில் உள்ள நிர்வாக கனவான்களில் திரு. ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் அவர்கள் மாத்திரம் அக்கமிட்டியில் சேவைசெய்ய தமது சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை என்று எழுதியிருந்தோம். திரு. செட்டியார் அவர்கள் மேல்நாட்டு யாத்திரை முடித்துக்கொண்டு சுகமே வந்துசேர்ந்தவுடன் தனது சம்மதத்தை தயவுடன் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

---

## திரு. பிள்ளை, முதலியார் சொற்பொழிவு.

நிகழும் விபவ, ஆவணி 31 புரட்டாசி 1 (15. 16—9,28) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்நாவலூற்றுசமாசசங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா பழனி ஒட்டன் சத்திரத்தில் திரு. காந்தை த. வே. உமாமகேசுரம் பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் நடைபெறும் அப்பொழுது திருவாளர் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதபிள்ளை, சென்னை திரு. வி. கலியாணசுந்தரமுதலியார், திருக்கோவலூர் ம. ர. குமாரசாமி பிள்ளை முதலிய அறிஞர்கள் பலர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

ஒரு நிருபர்.

# பஹிஷ்காரப்புரட்டும் சர்வகக்ஷி மகாநாட்டுப் புரட்டும்.

சர்வகக்ஷியாரும் சேர்ந்து ஒரு சுயராஜ்ய திட்டம் போட்டுவிட்டதாகவும் அதை எல்லோரும் சேர்ந்து ஒப்புக்கொண்டதாகவும் இனி பொது ஜனங்களும் சர்க்காரும் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் பாக்கியென்றும் அரசியல்வயிற்றுப்பிழைப்புப்பத்திரிகைகள் ஊளையிடுகின்றன. இது ஒரு அன்னக்காவடி "இராஜாமகளுக்கும் எனக்கும் கல்யாணம் தீர்மானம் ஆகிவிட்டது. ஆனால் ராஜாவும் அவனது மகளும் சம்மதம் கொடுக்கவேண்டியதுமாத்திரம்தான் பாக்கியாய் இருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டதுபோலிருக்கிறது. சர்வகக்ஷி மகாநாடு என்பது என்ன? அதில் யார்யார் இருந்து "திட்டம்" செய்தார்கள்? அவர்களுக்கும் நாட்டின் ஏழைமக்களுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா? இந்தியாவில்உள்ள எந்தஜாதியாருக்கு அல்லது எந்த மதக்காரருக்கு அல்லது எந்த தொழில்காரர்களுக்கு இவர்கள்சம்மந்தப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடும்?

மகமதிய சபையார்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? கிறிஸ்தவ சபையார்கள் ஒப்புக்கொள்கின்றார்களா? இந்துசபையார் ஒப்புக்கொள்கிறார்களா? பார்ப்பன சபையார்ஒப்புக்கொள்ளுகின்றார்களா? பார்ப்பனரல்லாதார் சபையார் ஒப்புக்கொள்ளுகிறார்களா? ஆதி இந்துக்கள் ஆதிதிராவிடர்கள் என்கின்ற சபையார் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

எனவே இந்தியாவில் இத்திட்டத்தையார் ஒப்புக்கொள்ளுகின்றார்கள் என்பது விளங்கவில்லை. ஒரு சமயம் உத்தியோகம் சம்பாதிக்கும்சபைகளாகிய காங்கிரஸ், சுயராஜ்ய, மிதவாத, சபைகளின் பேரால் உள்ள சிலர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள் என்று சொல்ல வருவார்களேயானால்

காங்கிரஸ் தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? அல்லது சுயராஜியக் கக்ஷி உபதலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றாரா? மற்றும் யார் ஒப்புக்கொள்ளுகின்றார்கள் என்பது விளங்கவில்லை.

மேல்கண்ட இத்தனை பேர்களும் டொமி சுயாராஜ்ஜியத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்பது தெரிந்து ஒப்புக்கொள்ளாத மேற்படியார்களை ஒருபக்கம் திட்டிக்கொண்டு மறு பக்கத்தில "சர்வகக்ஷி மகாநாட்டுத்தீர்மானத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்" என்று எழுதுபவர்களை பொது மக்கள் இப்போதாவது வயிற்றுப் பிழைப்பு பத்திரிகைக்காரர்கள் என்றுதீர்மானிப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபனை உண்டா என்று கேட்கின்றோம்.

தவிர இதற்கு முன் திட்டங்கள் போட்ட பல கனவான்களின் சங்கதியும் அத்திட்டங்களின் சங்கதியும், அதாவது ஸ்ரீமதி பெசண்டம்மை, திருவாளர்கள் விஜயராகவாச்சாரியார், மதன் மோகன் மாளவியா, சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், மோதிலால்நேரு மற்றும் அநேகர்கள் போட்ட திட்டங்கள் என்ன ஆயின என்பதும் "சிதம்பர இரகசியமாய்" இருக்கின்றது.

நிற்க இந்த சர்வகக்ஷி மகாநாட்டார் என்பவர்கள் புதிதாக செய்து முடித்திருக்கும் வேலைகளிலெல்லாம் குறிப்பிடத் தக்கது ஒரே ஒரு வேலைதான். அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்னும் சமத்துவத்தை ஒழிப்பதற்குச் செய்துள்ள சூழ்ச்சிதான்.

இந்த சூழ்ச்சியை சர்வகக்ஷிமகாநாடுதான் புதிதாக செய்திருப்பதாக அவர்களது கூலிகள் பெருமை பாராட்டிக் கொள்ளலாமானாலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஏற்பட்டது முதலே இதே கூட்டத்தார் அதாவது இப்போதுசர்வகக்ஷி மகாநாடு என்பதில் ஆதிக்கம்கொண்டுள்ள கூட்டத்தாரும் அவர்களுக்குஆதிமுதலே அடிமைகளாகவும்கூலிகளாகவும் இருந்துவரும் கூட்டத்தாரும் இந்த சூழ்ச்சிகள் செய்துவருவதுயாவருக்கும் தெரியாது என்பதாக நினைத்து இப்போது வேறு போர்வை போர்த்துக்கொண்டு வந்துவிட்டதாகத் தெரிகின்றது. இதே காரணத்தாலேயே சைமன் கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்று பார்ப்பனக் கூலிகளாய் இருந்து கூவினதும் பொது ஜனங்களுக்குத் தெரியாது என்று இவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது. எது எப்படியிருந்தாலும் பகிஷ்காரக் கூச்சலில் தாங்கள் தோற்றுவிட்டதை நன்றாய் அறிந்து அதே சைமன் கமிஷனின் பாதத்தில் வைத்து விழுந்து கும்பிட ஒரு திட்டத்தையும் தயார் செய்துகொண்டு அதற்கு சர்வகக்ஷி மகாநாட்டுத் திட்டம் என்பதாக பெயரையும் கொடுத்து முக்காட்டை விலக்கிக்கொண்டு வெளியில் வந்தாய் விட்டது.

எனவே இதனால் ஒவ்வொருவரும் அவரவர்கள் திட்டத்தை சைமன் கமிஷனுக்கு தெரிவிப்பதற்காக விரைந்துபோட்டிபோட வேண்டிய அவசியம் ஒன்று புதிதாய் ஏற்பட்டதேயொழிய வேறுஒருகாரியமும் ஏற்பட்டுவிட்டதாய்ச் சொல்வதற்கில்லை.

கடைசியாக நாம் குறிப்பிடுவது என்னவென்றால், கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற புரட்டை பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் கூலிகளும் என்றைக்கு ஆரம்பித்தார்களோ அந்த வினாடி முதல் அதைப் பற்றி நாம் என்ன என்ன எழுதியும பேசியும் வந்தோமோ அவைகள் எல்லாம் ஒன்று விடாமல் நடந்து வருகிறதா இல்லையா என்பதை மாத்திரம் ஞாபகப்படுத்திப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம்.

## "விஸ்வநேசன்"

திருவாளர்கள் கா. சுப்பண்ணஆச்சாரியார் அவர்களும் ந. நல்லைய்ய ஆச்சாரியார் அவர்களும்ஈரோட்டிலிருந்து 'விஸ்வநேசன்' என்பதாக ஒருபுதிய வாரந்திரப்பத்திரிகை நடத்துவதாக ஏற்பாடு செய்துவருவதாகத் தெரிகின்றது. அது சீக்கிரத்தில் வெளியாகலாமென்றும் நினைக்கின்றோம். அப்பத்திரிகையானது. ஏனைய சில சமூகப்பத்திரிகைகள் போலவும் அரசியல் புரட்டுப்பத்திரிகைகள் போலவும் வயிற்றுப்பிழைப்புப்பத்திரிகைகள்போலவும் 'அரைத்தமாவை அரைத்துக்கொண்டே இருக்கின்றது' என்பதுபோல் ஒவ்வொரு விஷயத்திலும் பார்ப்பனர்களையும் அவர்களது சமய பழக்கவழக்கங்களையும் பின்பற்றிக்கொண்டு கண்மூடித்தனமாய் நடப்பதாக இல்லாமல் சுதந்திரத்துடன் தனது சொந்த அறிவுக்கு மரியாதைகொடுத்து தற்காலம் நமது மக்களுக்கு வேண்டியதான வழிகளில் செல்லும் என்பதாக உறுதிகொண்டு அதை வரவேற்கின்றோம். அன்றியும் அதன் பத்திராதிபராகஇருக்கப்போகும் திரு. கா. சுப்பண்ண ஆச்சாரியாரவர்கள் ஒத்துழையாமைகாலத்தில்ஈரோட்டில் சர்க்காரின் அக்கிரம உத்திரவைமீறி சிறைசென்றவர். இப்போதும் தொழிலாளர் விஷயமாகவும் ஈரோட்டில் சர்க்காரால் போடப்பட்ட அனியாய உத்திரவை மீறினதாக கைது செய்யப்பட்டு திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலியவர்களுடன் விசாரணையிலிருப்பவர். எனவே இப்பேர்ப்பட்ட அவரது ஆதிக்கத்தில் அப்பத்திரிகை நடைபெறும் வரையில் அது பெரிதும் சுயமரியாதைக்கொள்கைகளையே ஆதாரமாய்க்கொண்டு நடைபெறும் என்பதும்நமது உறுதி. ஆதலால் இத்தகைய பத்திரிகையைப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டுகின்றோம்.

## சௌக்கிய மடைந்தேன்.

மலேயா நாட்டைச்சேர்ந்த சுங்கைபேரு திரு. என். வி. இராமலிங்கம்அவர்கள், தாம் வெகுகாலமாக நோய் வாய்ப்பட்டு வருந்தியதாகவும், எவ்வளவோ பேரிடம் வைத்தியம் செய்துகொண்டு மருந்து சாப்பிட்டும் குணமடையாமல் கடைசியாக பழனி வைத்திய நிபுணர் ஆர். எம். கே. வேலுசாமி அவர்களிடமிருந்து மருந்து வரவழைத்துச் சாப்பிட்டதில் பூரணகுணமடைந்தேன் என்று எழுதுகிறார்.

## காஞ்சீபுரம் சுயமரியாதைத் திருமணம்.

நாளது ஆவணித்திங்கள் 14-ம்நாள் பெரியகாஞ்சீபுரம் செங்கழு நீரோடைத்தெரு 56 நெ இல்லத்தில் 1. திருமிகு கெங்காதர முதலியாருக்கும் திருவளர்செல்வி அன்னபூரணி அம்மைக்கும் 2. திருமிகு மாசிலாமணி முதலியாருக்கும் திருவளர் செல்வி சின்னம்மைக்கும் சுயமரியாதைத்திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன. அன்றிரவு 8 மணிமுதல் திருநெல்வேலி தமிழிசைவாணர் சிவஸ்ரீ எஸ். சுந்தரஓதுவா மூர்த்தி அவர்களால் ஒருகாலக்ஷேபமும் நடத்தப்பட்டது.

ஒரு நிருபர்.

## கொட்டாம்பட்டியில் பார்ப்பனீயமற்ற திதி.

இன்று 26—8—28 தேதி ஞாயிற்றுக்கிழமை, மு. குமாரவேலுபிள்ளை அவர்கள் தம் தாயார் ஸ்ரீமதி பொன்னம்மாளின் 20-வது வருடத்திய திவசத்தைப் பார்ப்பனீயப் புரோகிதத்தை அறவே ஒழித்து, சுயமரியாதை வீரர் ஸ்ரீமான் பத்மனாபநாயுடு அவர்களைக்கொண்டு நடத்தினர்.

"நேரில் கண்டோன்"

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

யாமலும் செய்கிறதைக்காண்கிறோம். இந்தியாவின் தற்காலப்போக்கு எப்படி இருக்கின்றதென்றால், இந்திய சம்பந்தமான எல்லாவற்றையும் புகழ்ந்துவிடுவதும், மேல்நாட்டுச் சம்பந்தமான எல்லாவற்றையும் இகழ்ந்துவிடுவதுமாகும்.

நியாயத்தை விரும்பும் ஒவ்வொருவரும் பண்டைய ரிஷிகள் என்னப்பட்டவர் என் அத்தகைய தீங்குகளை ஆதரித்தனர் என்று அறிய விரும்புவர். இத்தகைய தீங்குமுறைகள் சாதாரண மனிதனுடைய அறிவிலேயே ஒழுக்கீனமும் அநியாயமும் பொருந்தியவையென்று புலப்படுகின்றனவன்றோ?

ஆரியக்கூட்டத்தைச் சேர்ந்த ஆத்தும ஞானமுடைய எந்த சந்யாசியாவது சாதுவாவது தயவுசெய்து மேலே எடுத்துக்காட்டப்பட்ட விதிகளைக் கண்டு, பிழைகாட்டியோ, அல்லது பிழைக்கு விவரம் தெரிவித்தோ பதில் கூறுவாரா? நம் முன்னோர்கள் மாதர்களது முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் ஒன்றுமே செய்யாதிருக்கையில், தற்காலத்திய ஹிந்துக்களாவது அல்லது பிற்காலத்திய ஹிந்துக்களாவது இனி பெண்மக்களை ஒழுங்காக நடத்துவர்என்று எப்படிக் கருத இயலும்? அதிர்ஷ்டவசமாக ஒரு மாது நல்லசித்தமுடைய ஒருமனிதனுக்கு வாழ்க்கைப்பட்டால், அவள் இந்த அந்நியாயங்களையெல்லாம் அனுபவிப்பதில்லையென்பது நிஜமதான். அந்த நல்லதிர்ஷ்டம் இல்லாவிட்டால், அவள் துணையற்றவளாயும் நிலையற்றவளாகவுமன்றோ ஆகிறாள். அவள் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டிய எல்லா ஆயுதங்களும், அவளுடைய போருக்குரிய எல்லா ஆயுதங்களும் மனிதர்களுடைய கையிலேயன்றோ உள்ளன. அவளுடைய கைகளே கட்டப்பட்டுள்ளனவே. டாக்டர் கோர் தமது "ஹிந்து கோட்"—இல் சொல்வதுபோல், ஒரு புதிய அவதாரமானது கிளம்பி ஹிந்துக்களது மதத்தையும் அவர்களது சட்டங்களையும் இலகுவாக்கினாலன்றி, ஹிந்துக்கள் முன்னேற வழியே இல்லை.

ஆதலால், இதை வாசிக்கின்றவர்களில் யோசனையும் தயாளமும் பொருந்தியவர்கள் ஹிந்துமாதர்களின் முன்னேற்றத்திற்கும், காப்புக்கும், உதவிக்கும் எழும் சீர்திருத்த இயக்கத்திற்குத் தம்மாலான உதவியெல்லாம் செய்யவேண்டுமென்று கோரப்படுகிறார்கள். பக்தராம் ஜீவதயாபிரசாரகர்

Feorzepore, Cantt. (Punjab).

## ஸ்ரீ ஞானப்பிரகாசத் தண்ணீர்த் திறப்புவிழா.

சென்னை அரசாங்கத்தாரின் அநுமதி பெற்றுக் கொத்தமங்கலம் தனவணிகமணி உயர் திரு சி. அ. சி. இராமன்செட்டியாரவர்களின்நன்கொடையைக் கொண்டு வெட்டிச் சேறெடுத்து கரைசுருயர்த்திப் பழைய படித்துறைகளைத் திருத்திப் புதிய படித்துறையமைக்கப் பெற்றிருக்கிற ஸ்ரீ சிதம்பரம் "ஞானப்பிரகாசம்" என்னும் குளத் திறப்புவிழா 31—8—28 காலை 7 மணிக்குச் சென்னை அரசாங்கச் சுகாதார அமைச்சர் கனம் என். முத்தையா முதலியார் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்களால் நிறைவேறியது.

பரஞ்சோதி ஸ்வாமி, சிதம்பரம்.

## ராமநாய்க்கன் பட்டியில் சுயமரியாதை முழக்கம்,

வத்தலக்குண்டுக்குதெற்கே உள்ள விராலிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவைகைநதிக்கரைக்கு அருகில் உள்ள ராமநாய்க்கன்பட்டியில் 19-8-28ல் மாலை 5 மணிக்கு திருவாளர் க. பத்மநாபநாயுடு அவர்கள் "மக்களும் சடங்குகளும்" என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

நாம் அர்த்தமற்ற சடங்குகளாகிய கருமாந்திரம், திதி, கலியாணம், காதுகுத்தல், முதலிய சந்தர்ப்பங்களில் சோம்பேறி கூட்டத்தாராகிய பார்ப்பனர்களுக்கு காய்கறிகள் தெக்ஷிணை முதலியவைகள் கொடுத்தாலும் நம்முடைய பெண்களும் அவர்கள் காலில்விழுந்து கும்பிடுவதால் மோக்ஷமோ நரகமோ வரப்போவதில்லை என்றும், அப்படி அச்சோம்பேறிக்கூட்டத்திற்கு கொடுப்பதை ஏழைமக்களுக்கு கொடுத்து நாங்களும் பந்துமித்திரர்களுடன் உண்டுகளிப்படையும் படிக்கும் சொன்னார்பல. பார்ப்பனசூழ்ச்சிகளை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி, கடைசியாக, பார்ப்பான் கிராமங்கள்தோறும் பார்ப்பனரல்லாத வீடுகளில் நம் மக்களால் மண்பாத்திரங்களில் காய்ச்சியபாலையும் கடைந்த வெண்ணை, மோர், தயிர், முதலியவைகளை தீட்டில்லை என்று எய்த்து பிடுங்கித் தின்பதையும், மற்ற சமைத்த காய்கறிகள் மாத்திரம் தீட்டென்று ஒதுக்கிவிடுவதுவும் ஆகிய குறும்புகளையும் எடுத்துக்காட்டினார்.

கூட்டத்திற்கு நாய்க்கர், கள்ளர், ஆதிதிராவிடர்கள், முதலியோர்கள் வந்திருந்தார்கள். ஜனங்களுக்குள் அதிக கிளர்ச்சி யேற்பட்டிருக்கிறது.

சுயமரியாதைக்கு ஜே! ஒரு நிருபர்.

## சென்னை மாகாண ஆதி இந்துக்களின் மகாநாடு.

1928 ஷ ஆகஸ்டு மாதம் 26 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிக்கு தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் டவுன் பட்டமங்கலம் தெரு, முனிசிபல் எலிமெண்டரி பாடசாலையில் ராவ் பகதூர் எம். சி. ராஜா எம். எல். ஏ. அவர்களின்தலைமையின் கீழ் நடைபெறும். அப்போது சிதம்பரம் நந்தனார் மடம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சகஜானந்தம் எம். எல். சி. அவர்கள்ராயல்கமிஷன்வரவேற்பு; வைதீக விஷயம், பொதுஜனக்குறைகள், முதலியவைகளைப் பற்றிப் பேசுவார்.

வரவேற்புக் கழகத்தலைவர்,
க. அ. கதிர்வேல்.

## மணப்பச்சேரியில் சுயமரியாதைப் பிரசாரம்.

ஸ்ரீமான், பத்மநாப நாயுடு அவர்களின் உபன்யாசம்.

24-8-28, இரவு எட்டுமணிக்குமேல் மணப்பச்சேரியில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது.

அதுகாலை திருவாளர் பத்மநாப நாயுடு அவர்களால் ஆதிதிராவிடர்கள் முன்னேற்றம் என்பதைப் பற்றியும், வேதம், புராணம், சாஸ்திரம், இதிகாசம் மதம், சடங்கு என்பவைகளைப்பற்றியும் அவைகளால் நடைபெறும் மோசங்களைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அவ்வமயம், ஊரிலிருந்த குடியானவர்கள் ஆதிதிராவிட சகோதர சகோதரிகள், எல்லோரும் வந்திருந்து கேட்டுசுமார் 10 மணிக்கு கூட்டம் கலைந்தது.

ஜீ. சுந்தர வேல்.

## இந்து விதவைகட்கு விமோசனம்.

ஒரு வருஷகாலமாக சுயமரியாதை மகாநாடுகளிலும் பார்ப்பனரல்லாதார் மகாநாடுகளிலும் இந்து விதவைகள் கஷ்டத்தைப் போக்குவதற்காக, அதாவது அவர்கள் கணவன்மார்கள் உள்ள காலத்தில் அனுபவித்து வந்த நிலைமையில் குறையாமல் இருப்பதற்காக தங்கள் கணவன்மார் சொத்தில் பூர்ண உரிமை கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு எற்ற சட்டங்கள் செய்ய வேண்டுமென்று சட்டசபை மெம்பர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டு வந்தன. அதன் பலனாக இப்பொழுது ஷை தீர்மானத்தை அநுசரித்து அவர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக இந்திய சட்டசபையில் திருவாளர் ஹாபிலாஸ் சர்தாவால் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதாவது "ஒரு பெண்ணின் கணவன் குடும்பத்தில் பாகப் பிரிவினையாவதற்கு முன்னமே இறந்துவிட்டால் அப்பெண்ணுக்கு அவள் கணவன் இருக்கும் போது எவ்வளவு பாகம் கிடைக்குமோ அவ்வளவு பாகம் கொடுக்க வேண்டும்" என்பதே. ஆகவே இந்த மசோதாவை நமது மாகாணத்திய இந்தியா சட்டசபை அங்கத்தினர்கள் அனைவரும் ஆதரிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

## நாவலூற்று, சமரச சன்மார்க்க சங்க இரண்டாம் ஆண்டு நிறைவு விழா

இவ்விழா 1928-செப்டம்பர் 15, 16, ஆம் நாட்களாகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், ஒட்டன் சத்திரத்தில் திரு அ. க. வேலுசாமிபிள்ளையவர்கள் பேட்டையில் தஞ்சை வழக்கறிஞரும், கரந்தைத் தலைவருமாகிய திருவுயர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பி. ஏ. பி. எல். அவைத்தலைமையில் நடைபெறும். அவ்வமயம் தாய்நாடு, திருவள்ளுவரும் இல்லறமும், சுகபோகம், திருக்குறள் ஆராய்ச்சி, வெற்றுரை, இறைவனும் இயற்கையும், சிவயோகம், என்னும் விஷயங்களைப்பற்றி முறையே திருவாளர்கள் கே. அப்துல் ஈக்கூர் சாகிப், சி. சிதம்பரசாமிக் கவுண்டர், ம. ரா. குமாரசாமிப்பிள்ளை மு. வெங்கட்டசாமி நாட்டார், கி. ஆ. பெ. விஸ்வநாதபிள்ளை திரு. வி. கல்யாண சுந்தரமுதலியார், ரா. குமாரசாமிப்பிள்ளை முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

## சென்னை சர்க்கார் சட்ட இலாக்கா அறிக்கை.

பொது ஜனங்களுக்கு இதனால் தெரிவிக்கப்படுகிறதென்னவென்றால், ஆப்கன் கான்சல் ஜெனரலுக்கு தாக்கல் இல்லாமலேயே, இந்தியாவிலுள்ள ஆப்கானிய பிரதிநிதிகள் ஆப்கானிஸ் தானத்துக்குச் செல்வோரின் பாஸ்போர்ட்டுக்கு ஒப்பம்கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

சென்ட் ஜார்ஜ் கோட்டை, 25—8—28 — ஜி. எஸ். பாஸ்மன், ஆக்டிங் கவர்ன்மெண்ட் காரியதரிசி

## கனம் வீராசாமி நாயுடு.

### அவர்களுக்கு
### F. M. S. ரயில்வே சென்றல் ஒர்க்ஷாப்பு தொழிலாளர்கள் அளித்த
## நல்வரவேற்பு பத்திரம்.

அன்பே உருவெடுத்த சத்தியபாலரே வருக! வீரசிகாமணியே வருக! வருக! நல்வரவாகுக!

தலைவர் அவர்களே! எங்கள் குறைகளை எடுத்து மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்து நிவர்த்தித்துக்கொள்ள ஒருசங்கம் எங்களுக்குள் இல்லாமல் இருந்துவரும் குறையால், எங்கள் குறைகளை எடுத்துரைக்க முடியாமல் அதிகாரிகளின் கொடூரப் பார்வைக்குள்ளாகவேண்டி நேரும் என்ற பயத்தினாலே எங்களில் எவரும்முன்னுக்கு வர முடியாமல் போய்விடுகிறது மன்னியில், இவ்விதம் கூட்டம்கூடி வெளியேயுள்ள அரும்பெரும் தலைவர்களின் உதவி எல்லாம் தேடவேண்டி நேரிடுகிறது. மேலும் எங்களில் ஒற்றுமை குலைந்து பிரித்தாளப்பட்டும் வருகிறோம். இச்சூழ்ச்சி தொலைந்து ஒற்றுமை ஏற்பட்டு அதன்மூலம் அப்போதைக்கப்போது குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டி ஒருசங்கத்தை சட்டப்படி ஸ்தாபித்துக்கொடுக்கும் பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுகிறோம். இப்பேருதவியை என்றென்றைக்கும் நாங்கள் மறவோம். பெரும் நன்றி உள்ளவர்களாகவே இருந்துவருவோம்என்று உறுதிகூறுகிறோம்

எங்கள்சபைக்கு தலைமைவஹித்து எல்லாவிதத்திலும் உதவிபுரிய முன்வந்ததைப் பற்றி நாங்கள் பாராட்டுகிறோம். தங்களது ஊக்கமும் விடாமுயற்சியும் பெருந்தகைக் குணமும் மேலும் மேலும் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று சுகஜீவியாய நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம். இப்படிக்கு, F. M. S. ரயில்வே சென்றல் ஒர்க்ஷாப்பு தொழிலாளர்கள்.

---

### கட்டுக்குடிப்பட்டி வாசிகளுக்கு ஓர்வார்த்தை.

அறிவினும் அன்பினுஞ்சிறந்த பெரியோர்களே! நம் பாரதநாட்டின் விதவைச் சகோதரிகளுக்கு மறுவிவாகம் செய்யாமல் வைத்திருப்பது கொடுமையிலும் கொடுமை. ஆடவர்களுக்கு தாரமிழந்த ஒருவாரம் பத்து நாளைக்குள் மறுவிவாகம் செய்துவிடுகிறோம். புருடனை இழந்த பெண்களோ ஆயுள்காலம்வரை தவிக்கிறார்கள். அந்தோ கொடுமை! பெண்களுக்கும் அதுபோல் மறுவிவாகம் செய்யவேண்டியது முக்கிய கடமையல்லவா? ஆகவே அதற்கு ஊரிலுள்ள நேவின்முறையாளரும் மற்றுமுள்ள பெரியார்களும் உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இதற்கு உதவி புரியாவிட்டால் இதனால் விளையும் மானக்கேடுகளுக்கும் கேவலமான செய்கைக்கும் உட்பட்டு உதவி புரிந்தவர்களாவார்கள் என்பதில் என்ன ஐயம்? ஆகவே இதை யோசித்து முடிவு செய்யும்படி பன்முறை வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன். சீனிவாஸன்.

### மலேயா நாட்டுத் தொழிலாளர் கூட்டம்.

F. M. S. ரயில்வே ஒர்க்ஷாப்பு தொழிளாளர்கள் தங்களுக்கு இருந்து வரும் குறைகளைப்பற்றி ரயில்வே நிர்வாகிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டும் ரயில்வே நிர்வாகிகள் அக்குறைகளை நிவர்த்திக்காது நிர்வாகம் செவிடாய் இருந்து வருந்தமையினாலே சட்டத்திற்குள்ளடங்கிய அமைதியும் நியாயமுமான கிளர்ச்சி செய்ய வேண்டி ஷை ரயில்வே நிர்வாகிளால் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டவர்களாகி சென்ற 19-8-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் பத்து ரோடு 2½ கட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ தம்புசாமி பிள்ளை அவர்கள் ஸ்கூல் கட்டிடத்தில் கனம் தங்கிய ஹானரபிள் வீராசாமி லாயர் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது அப்பொழுது ஏராளமான தொழிளாளர்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்தின் நடவடிக்கைகள் பின்னர்.

F. M. S. Rly சென்றல் ஒர்க்ஷாப்பு தொழிலாளர்களுக்காக,
K. அப்துல்ஹமீத்கான், S. முருகேசம்பிள்ளை

### திருப்பூர் சுயமரியாதைத் திருமணங்கள்.

காளீஸ்வர் & கல்லாய் மில்ஸ் துபாஷியும், பிரபல நூல் வியாபாரியும், பேங்கரும், நகரசபை அங்கத்தினருமான திரு. மு. சிக்கண்ண செட்டியார் அவர்களின் சகோதரர்களின் குமாரத்திகளுக்கு பார்ப்பனீயக் கலப்பு சிறிதுமின்றி நிகழும் ஆவணி 11உ திருமணங்கள் சிறப்பாய் நடைபெற்றன. இத்திருமணங்களுக்கு உள்ளூர் வெளியூர் பிரபலஸ்தர்களும பந்து மித்திரர்களும் ஏராளமாய் வந்திருந்தனர். திருநெல்வேலி சைவத் திருவாளர் சுந்தரமூர்த்தி ஓதுவார் அவர்களால் ஓர் காலக்ஷேபம் நடத்தப்பட்டது மன்றி வந்திருந்தவர்களுக்கும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் இரண்டுநாள் விருந்துகள் செய்யப்பட்டன. ஒரு நிருபர்.

### வெளிப்பாளையம் சுயமரியாதைத் திருமணமும் நன்கொடையும்.

சென்ற 26-8-28ல் ராமமடத் தெரு திரு. சா. து. துரைசாமி பிள்ளையவர்களின் குமாரன் திரு. சுப்பரமணியனுக்கும், நாகை திரு. டி. எம். முருகய்ய பிள்ளையவர்களின் திருச்செல்வி தானக்கண்ணம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் சிறப்பாய் நடைபெற்றது. அதுபோழ்து "திராவடன்" பத்திரிகைக்கு ரூபாய் ஒன்றும் "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபாய் ஒன்றும் நன்கொடையாக அளிக்கப்பட்டன. துரைராஜய்யா.

### பண்டைத் தமிழர் திருமணம்

26-8-28 திருநெல்வேலி தச்சநல்லூர் திருவாவர் மகாராச சுந்தரம் பிள்ளை அவர்கள் புதல்வி திருவளர் செல்வி மரகதத்தம்மையாருக்கும் திருநெல்வேலி பிரபலவியாபாரி திருவாளர். ச. சுப்பையா பிள்ளை அவர்கள் தமையனார் குமாரர் திருவளர்ச் செல்வன் நடராசர் அவர்களுக்கும் மரகதசுந்தரர் குருக்கள் அவர்களைக் கொண்டு தமிழ் மொழியிலேயே மணநடந்தது. சுந்தரம்.

### பார்ப்பனீயம் ஒழிந்த பெரிய இடத்துத் திருமணம்.

பூளை மேடு ஸ்ரீரங்க விலாஸ் மில் மேனேஜிங் ஏஜண்டும், கோவை ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு உறுப்பினரும் பெரு நிலக் கிழவரும் ஆகிய திருவாளர் பி. எஸ். ஜி. கெங்கநாயுடு அவர்கள் மகள் நிறை நாட்செல்வி சரஸ்வதி யம்மாளுக்கும் காடிவாவிப் புத்தூர் பெருநிலக்கிழவரும் கம்மவார் மகாநாடு உபசரணைக் கூட்டத்தலைவரும் ஆகிய திருவாளர் கே. கிருஷ்ண சாமி நாயுடு அவர்கள் திருத்தம்பியார் நிறை நாட் செல்வன் கே. வெங்கிடபதி நாயுடுவுக்கும் 26-8-28 ஞாயிற்றுக்கிழமை திருமணம் நிறை வேறிற்று.

அதுகாலை திருவாளர் பி. எஸ். ஜி கெங்க நாயுடு அவர்களின் திருத்தமயனார் திருவாளர் பி. எஸ் ஜி. வெங்கட சாமி நாயுடு அவர்களும், திருவாளர் தமிழ் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் தமிழ் மறைகள் ஓதி திருமணமும் சீர்களும் நிறை வேற்றினார்கள்.—பூளை மாநகரில் சுயபுரோகித முதன்மைத்திருமணம் இதுவே என்று அனைவரும் கண்டு களித்து வாழ்த்தினார்கள். எ. கொண்டசாமி நாயுடு!

---

### சுயமரியாதைத்திருமணங்களும் நன்கொடையும்.

—)0(—

26-8-28 ஞாயிற்றுக் கிழமை யன்று திருநெல்வேலி சாலியர் தெரு திரு தி. முத்துசாமி பண்டிதர் அவர்கள் சகோதரர் திரு. சங்கர சுப்பு அவர்களுக்கும் திரு. திருமலைக்குமாரபண்டிதர் அவர்கள். குமாரத்திஸ்ரீமதிகாந்திமதியம்மையாருக்கும் சுயமரியாதைத் திருமணம் நடந்தது. மேற்படி திருமணத்தை திருநெல் வேலி ஜில்லா சுயமரியாதை பிரசாரகர் திரு. இலட்சுமண பிள்ளை யவர்களும் தென்னிந்திய மருத்துவ சங்கத்தலைவர் பண்டித திரு. யஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களுமாக பண்டைய தமிழர்கள் முறையை அநுசரித்து தமிழ் மொழியிலேயேசிறப்பாக நடத்திவைத்தார்கள்.—திருமணத்திற்கு பலபிரமுகர் களும் பந்து மித்திரர்களும்விஜயம் செய்திருந்தனர். திரு. ஆனந்தம் அவர்களும். திரு. லெட்சுமண பிள்ளை அவர் களும் "சுயமரியாதையைப்பற்றி" விபரமாக எடுத்துப் போதித்தார்கள். நமது இயக்கத்திற்காக உழைத்து வரும் "திராவிடன்" பத்திரிகைக்கு ரூ 2—0—0ம் குடிஅரசு பத்திரிகைக்கு ரூ 2-0-0ம் திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை சங்கநிர்வாகத்துக்காக ரூ 2—0—0ம் நன்கொடையாக கொடுக்கப் பட்டது. சுந்தரம்.

—:o:—

### சுயமரியாதைத் திருமணமும் நன் கொடையும்.

ஆம்பூர் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தலைவர் உயர் திரு. வெ. மாணிக்க முதலியார் அவர்கள் தம் மூத்தமகளாகிய செல்வி ஜானகிக்கு ஆம்பூர் சாணுங்குப்பத்தில் 26-8-28ல் தமிழ் மணம் கமழ திருமணம் செவ்வனே நடத்தி வைத்தார்.

அதுபோழ்து, நம் இயக்கத்திற்காக இடைவிடாது உழைத்துவரும் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடிஅரசு" பத்திரிகைகளுக்கு முறையே ரூ 2, 3, 5, ம் வடாற்காடுஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிற்கு ரூ 5 ம் மனமுவந்து அளித்தனர். மணவிருந்தாக யாதொரு பாகுபாடுமின்றி ஓர்சிறந்த சமபந்திவிருந்து அளிக்கப்பெற்றது.

இம்மண விழாவிற்கு சென்னை, வேலூர், குடியாத்தம, மேல்பட்டி, ஆம்பூர், வாணியம்பாடி, அம்பலூர் மூதலான இடங்களிலிருந்து தலைவர்களும் பெரியார்களும் விஜயம்செய்திருந்தனர்.

"சுயமரியாதைத்தொண்டன்"

பிலங்கு

## மருத்துவகுல சங்கம்.

சென்ற 8-8-28 ல் திரு. சொ. ஏகாம்பர பிள்ளையவர்களின் தலைமையில் சுமார் 300 மருத்துவர்களும் மருத்துவ குலாபிமானிகளும் கூடினர். வருடாந்தா அறிக்கை வாசிக்கப்பட்டது. புதுவருடத்திற்கு நிர்வாக அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

டாக்டர் என். கெ. மேனன் போஷகராகவும், திரு. ஏகாம்பர பிள்ளை தலைவராகவும், திரு. வெ. அய்யாக்கண்ணு பண்டிதர் உபதலைவராகவும், திரு. எஸ். எஸ். வடிவேலு காரியதரிசியாகவும், திரு. ம. மொ. திபாகராஜா உபகாரியதரிசியாகவும், திரு டி. எஸ். ஸ்ரீனிவாசம், திரு. கா. ஸ்ரீனிவாசம பொக்ஷதாரர்களாகவும், திரு. முத்துவீரு கணக்குப் பரிசோதகராவும், திருவாளர்கள் டி. எ. தங்கவேலு பண்டிதர், ம. வெ. நடேசன், ப. நடேசன், கெ. அப்பாவு பண்டிதர், வை. கோபால்சாமி ஆகியவர்கள் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப் பட்டனர்,

(6 ம் பக்கம் தொடர்சி)

படித்தவன், கற்றவனென்று சில காலிகள் தனக்கும் சொந்தஅறிவில்லாமல் படித்ததையும் ஆராயாமல் "பெரியபுராணம் பொய்யென்கிறானே! இராமாயணத்தில் குறைவுண்டு என்கிறானே! சாதியில்லையெனகிறானே" என்று முட்டாள்தனமாய் உளறுகிறார்கள். அரசனிடத்தில்வந்துபையை அவிழ்த்து விபூதியை எடுத்து சிவாயநம என்று மந்திரம்சொல்லி அரசன் முதுகில்தடவி அவன்காய்ச்சலைப்போக்கிதொம்பன் வித்தையைப் போல்காட்டி, "பார்த்தாயா சைவத்தின்பெருமையும் சமணர்கள் சிறுமையும்" என்றுசொல்லிபிறகு சமணர்கழுவில் எற்றப்பட்டபொழுது அது அரசனது கட்டளையென்று வாய்மூடிமௌனமாயிருந்த சமயாச்சாரிகள் முதலிலேயே தமது சக்தியினால் சமணர்கள் மனதைமாற்றி சைவர்களாக்க முடியாதா? அந்தசக்தியை எந்தஅக்கிராரப் பார்ப்பனருக்காவது அடமானபோக்கியத்துக்கு வைத்துவிட்டாரா அல்லதுவிற்றவாயில் போட்டுக்கொண்டாரா என்பதை யாராவது முன்வந்து சொல்லட்டுமே பார்க்கலாம். இவர் அற்புதம் பண்ணினார் அவர் அற்புதம் பண்ணினார்என்று எழுதிவைத்து மூச்சுவிடாமல் பாடி உடனே தேங்காய் பழம் கற்பூரம் எடுத்துக்கொண்டுபோய் குப்பறவிழுந்துவிட்டு பார்ப்பானையும் சாமிசாமிஎன்று கும்பிட்டு முடிச்சைஅவிழ்த்து கொடுத்துவிட்டு வருவதல்லாமல் உண்மைஅற்புதம் ஏதாவதுண்டா?

6000 மைலுக்காப்பால் பேசுவதை இங்கிருந்து கேட்கும் கருவியை வருணாசிரம இந்துமதம் கண்டுபிடித்ததா? அல்லது இவைகளைப்பார்த்துக் கொண்டிருக்கும் வெள்ளைக்காரன் கண்டுபிடித்தானா?

இப்படியே ஒவ்வொருபுராணத்தின் யோக்கியதையையும் அறிவுடையமக்கள் எடுத்துச்சொல்ல அதை அறிந்து தெளியாமல், கடவுள்போச்சு!மதம் போச்சு!என்று கூப்பாடு போட்டுக்கொண்டு எச்சில் கிண்ணம் கழுவிக்கொண்டு தருப்பைப்புல்லை கிள்ளிகட்டிப்பிழைக்கும் கூட்டத்தாருக்குப் பயந்துகொண்டு அடிமைவாழ்க்கைவாழ விருப்பமுடைய சாம்பிராணிகளை அவர்களிஷ்டப்படி விட்டுவிடுவதில் ஒருவருக்கும் ஆட்சேபனையில்லை.

எனவேஇந்தக்காலத்தில் இந்த ஒரு ஊரில் இவ்வளவு அக்கிரமங்கள் நடைபெறுகின்றனவென்றால், அவர்கள் ஆதிக்கங்களிலுள்ள மற்றஇடங்களிலெல்லாம் எவ்வளவு நடைபெறும் என்பதை நீங்களே உங்கள் அறிவினால் தெரியுங்கள்.

"கோபி, டம் டம் புல்லட்"

## ஒரு பெரியாரின் மரனம்.

தென் இந்தியாவில் கியாதிபெற்ற வேலூர் மௌலானா மௌலவி குலாமுகய்யதீன் ஹஜரத் மர்ஹூம் அவர்களின் மாமியாரும் சென்னை "ஸைபுல் இஸ்லாம்" பத்திராதிபர் மௌலானா மௌலவி அகம்மது சயீது சாயபு அவர்களின் தாயாரும், இவ்வூர் கண்ணிய குடும்பத்தை சேர்ந்த ரஹீமாபீவி அவர்கள் சுமார் 110 வயதையடைந்து 8 நாள் காயலாவாக இருந்து 12-8-28 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு சுரூர் தாஹூகா ஈசநத்தம் போஸ்டு சூலபுரத்தில் தாருல்பனாவைவிட்டு தாருல்பகாவைச் சேர்ந்தார்கள். (இன்னாலில் லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) இப்பெரியாரின் மௌத்து இவ்வூராருக்குப் பொதுவாகவும் சொந்த பந்துக்களுக்குக் குறிப்பாகவும் பெரும் துக்கத்தைக்கொடுத்திருக்கிறது.

திங்கட்கிழமை பிற்பகல் மணி 4க்கு பல ஊர் ஜனங்கள் திரளாசக்கூடிய பெரும் ஜமாத்துடன் "ஸைபுல் இஸ்லாம்" மௌலவி அவர்களால்ஜனாஸாதொழுகவைக்கப்பட்டுவெகு சிறப்பாக நல்லடக்கம் செய்யப்பட்டது.

நல்ல சந்தர்ப்பத்தில் பந்துக்களும் மித்திரர்களும் வந்து சேர்ந்துகொண்டதும், மௌத்தாவின் கலபுக் கனியாகிய கடைசிப் புதல்வரான "ஸைபுல் இஸ்லாம்" மௌலவி அவர்களும் மற்ற மக்களும் முந்தியே வந்து மௌத்துக்கு கூட இருந்ததும் இன்னவர்கள்மீது மௌத்தா வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகின்றது.

மௌத்தா மாஹூமா அவர்களின் மார்க்க பகதியும் மார்க்க ஊழியமும் புகழத்தக்கவைகளாகும், அவர் சுமார் 50 வருஷங்களுக்கு முன்பிருந்தே மார்க்க விரோதமானவைகள் எங்கும் வியாபித்துக் கிடந்த அஞாகரீகமான அக்காலத்திலேயே மாஹூமா அவர்கள் அவ்வித மார்க்க விரோத காரியங்களையும் நேர்ச்சை முதலிய சாங்கியங்களையும் விட்டொழித்து மார்க்க நெறி தவறாமல் நடந்தும், பல உலமாக்களின் நல் உபதேசங்களைப் பெற்றும் அவைகளைப் பெண்களுக்கு நசீஹத்துச் செய்தும் சீர்திருத்தம் செய்து வந்தார்களென்பது உண்மை.. மாஹூமா அவர்கள் நபிமார்களின் சரித்திரங்கள் ஒலிமார்களின் சரித்திரங்கள் அவர்கள் நல் உபதேசங்கள் நாயக வாக்கியங்கள் முதலியவைகளை நன்கு அறிந்தவர்களாகவும் ஆண்டவனின் உள் அச்சங்கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

இவரால் சீர்திருத்தம் பெற்றவர்களில் மர்ஹூமா அவர்களின் சொந்த பந்துக்களே முதன்மையானவர்களாகக் காணப்படுகின்றனர். மர்ஹூமா அவர்களின் செல்வபுத்திரரத்தினமான "ஸைபுல் இஸ்லாம்" இஸ்லாம் மார்க் கல்விக் களஞ்சியமாகக் கியாதி பெற்று விளங்குவதும் மௌலானா மௌலவி குலாமுகய்யதீன் ஹஜரத் மர்ஹூம் அவர்களின் புதல்வர்கள் கியாதி பெற்ற மௌல்விகளாக விளங்குவதும் மர்ஹூமா அவர்களின் பாக்கியமென்றே கூறலாம், இத்தியாதி நன்மைகளைச் செய்த பெரியார்மௌத்தானது இவ்வூருக்கே பெரும் கஷ்டமென்பதிலையமில்லை. மர்ஹூமா அவர்கள் கடைசி மூச்சு வரை ஆண்டவனது ஞாபகம் மறவாமலும் நல்ல ஞாபகத்துடனும் இருந்ததானது அவர்கள் சீதேவி என்பதற்கு அறிகுறியெனத்தெரிகிறது. ஆண்டவன்மர்ஹூமாவுக்கு மக்பிரத்தையும் அவர்களின் பந்துமித்திரர்களுக்கு சபுரையும் தருவானாக. ஆமீன்! என்று நிருபர் எழுதுகிறார்.

## கும்பகோணம் சர்ச் ரோடு, கத்தோலிக் கிருஸ்துவர்களின் முறையீடு.

கும்பகோணம் (Church Road) சர்ச் ரோடு கத்தோலிக்கு கிருஸ்துவர்கள் 14—8—28 செவ்வாய்க்கிழமை இரவு சுமார் ஒரு மணிக்கு மோட்சராக்கினி திருவிழாவுக்கு மாதா சப்பரம் கொண்டுவரும்பொழுது வழக்கம்போல எங்கள் காணிக்கைகளை செலுத்துவதற்காக மெழுகுவர்த்தி புஷ்பம் முதலியவைகளை நாங்கள் வாங்கிவைத்துக்கொண்டு ஆவலாய் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். சப்பரம் வந்ததும் காணிக்கைகளை செலுத்தப்போனபோது வெடி சப்பரத்துடன் வந்தவர்கள் குருவினுடைய உத்திரவில்லாமல் எங்களுடைய காணிக்கைகளை வாங்கிக்கொள்ள முடியாதென்றும் குரு எங்களுடைய காணிக்கைகளை பெற்றுக்கொள்ளக் கூடாதென்றும் சொல்லி இருப்பதாக சொல்லி மறுத்துவிட்டார்கள். இதனால் எங்களுக்கு மானநஷ்டமும் மனோவியாகுலமும் உண்டாகி இருக்கிறது.

எங்கள் மாதாவை வணங்குவதற்குக்கூட எங்களுக்கு சுதந்திரமில்லையா? இந்து குருக்களை குற்றம் சொல்லும் "நாகரீகம் அடைந்த" ஆங்கிலேய குரு நாங்கள் கடவுளை வணங்குவதற்கு குறுக்கே நிற்பது நியாயமா? சமரசமுள்ளது கிருஸ்து மதமென்று சொல்லிக்கொண்டு இப்படி அநியாயங்கள் நடக்க இடங்கொடுக்கலாமா? என்பதைப் பற்றி எங்கள் அன்பார்ந்த கிருஸ்துவ சகோதரர்கள் மிக்ககவலையுடன் கவனிப்பார்களாக. நாம் கடவுளைப் பணிவதற்கு இடங்கொடுக்கக்கூடாதென்பதற்கு குரு தமது ஆதாரத்தை தெரிவிக்கக்கோருகிறோம்.

கத்தோலிக் கிருஸ்துவர்கள்

## ஓர் அநுதாபம்.

திருச்சிராப்பள்ளி சின்னகடைதெரு யாதவ குல திலகரான எம். முத்துசாமிகோனார் அவர்கள் சென்ற 7-8-28-ல் பகல் 3-மணிக்கு திடீரென்று அவரது இல்லத்தில் மரணமடைந்தார். இவர்இறந்தது யாதவகுலத்திற்கே பெரியநஷ்டமுமாகும். இவர் திருச்சி டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் காப்பிங்சூப்பரின்டெண்டாக இருந்து பென்ஷன் பெற்று, உறையூர் கம்மர்சியல் பாங்க் காரியதரிசியாகவும் விளங்கினர். 1926-ஆம் ஏப்ரல்-மீ திருச்சியில்நடந்த இரண்டாவது யாதவகுலமகாநாட்டிற்கு வரவேற்புக்கழகத் தலைவராக விளங்கி அம்மகாநாட்டை வெகுசிறப்பாகச்செய்த பெருந்தகையாவர். இவர் குடும்பத்தார்க்கு திரிசிரபுரம் யாதவர்கள் இதன்மூலம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எம். அப்பாசாமி

## மூனிசிபல் ஆண்பிள்ளை பள்ளிக்கூடத்து ஆண்டுவிழா.

சென்ற 19-8-28 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மதுரை தெற்கு வாசல் சின்னக்கடை முனிசிபல் ஆண்பிள்ளை பள்ளிக்கூடத்து 5-வது ஆண்டு நிறைவு விழா விக்டோரியா எட்வர்ட் ஹாலில் திருவாளர் மதுரை முனிசிபல் சேர்மன் R. S. நாயுடு, Bar-at-law, F. M. U. அவர்கள் தலைமையின்கீழ் நடந்தேறியது. அவ்வமயம் அநேக முனிசிபல் கௌன்சிலர்களும் இந்நகர் மகாஜனங்களும் சுமார் 1000 பேருக்குக் குறையாமல் விஜயம் செய்து கனப்படுத்தியது குறிப்பிடத் தக்கது.

மானேஜிங் கமிட்டியாரால் அக்கிராசனாதிபதியவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. இப்பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் K. M. வீராச்சாமி பிள்ளையவர்களால் சென்ற 5 ஆண்டுகளின் ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டது.

பள்ளிக்கூடத்து மாணவர்களால் "மலையான பங்கஜவல்லி அல்லது மங்கை கற்புக்கரசி" என்ற நாடகம் அதி விமரிசையாய் நடித்துக் காண்பிக்கப்பட்டது. அதில் சுப்பிரமணியன் ரிஷிவேடங்கொண்டு, கடவுள் ஒருவரே என்றும், உலகத்தில் எம்மதமும் சம்மதமென்றும், பிறப்பினால் ஒருவனும் உயர்வு தாழ்வு அடையமாட்டானென்றும், அப்படியல்லாமல் வருணாச்சிரமங்களைக் கற்பித்து ஒற்றுமையைக் கெடுத்து தீண்டாமை பார்க்காமை முதலிய பேதத்தை விருத்தி செய்து மூடக் கொள்கைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் பரப்பி மக்களின் அறிவைக் கெடுத்து மனிதர்களை மனிதர்கள் அடிமைப் படுத்துகின்ற மதங்கள் ஒரு போதும் மதங்கள் ஆகா என்றும், அத்தகைய மதங்களிருந்து உலகத்தைக் கெடுப்பதைக் காட்டிலும் இல்லாதிருப்பது மேல் என்றும் எடுத்துக் காட்டியதும் குறிப்பிடத் தக்கது.

முடிவுரையாக சேர்மன் அவர்கள் இவ்வளவு விமரிசையுடன் இந்நாடகம் நடத்தியதற்கும் உபாத்தியாயர்களுக்குள்ள ... மைக்கும் சந்தோஷம் அடைகிறேன் என்றும் சொன்னதோடு அடுத்த ஆண்டு நிறைவு விழாவிற்கு முனிசிபாலிட்டியி லிருந்தே உதவி புரிவதாகவும் வாக்களித்தது மிகவும் பாராட்டத் தக்கது. கூடிய சீக்கிரம் இப் பள்ளிக்கூடத்துக்கு முனிசிபாலிட்டியிலிருந்து சொந்த கட்டிடம் கட்டப்படும் என்று நம்பப்படுகிறது. கடைசியாக தாம்பூலம் வழங்கப்பட்டு ராஜ வாழ்த்துடன் விழா முடிவுபெற்றது. கணபதியப்ப பிள்ளை,

## புரோகிதம் ஒழிந்த திதி,

பெரியகுளம் தாலூகா, வடுகபட்டி, சேடபட்டி பிரபல ஜவுளிவர்த்தகரும், மேல்மங்கலம் யூனியன் போர்டு மெம்பரும், மாஜி கர்ணமுமாகிய திருவாளர் கே. வீராசாமி பிள்ளை அவர்கள் காளிது விபவ-ஹூ ஆடி-மீ 26-உ தம் தகப்பனாரின் வருஷதிதியை சுயமரியாதை கொள்கைப்படி ஏழைகளுக்கு உணவளித்து முடித்தார்.

வடுகபட்டி கே. ஆர். பொன்னழகர்சாமி.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணமும் "குடி அரசு" க்கு நன்கொடையும்.

திருச்சி தேங்காய் வர்த்தகம் திரு. பூலோகம் பிள்ளை அவர்களின் குமாரர் டி. பி. சுப்பிரமணிய பிள்ளைக்கும், துவறக்குறிச்சி திரு. அழகப்பபிள்ளை குமாரத்தி சௌபாக்கியவதி வேம்பம்மாளுக்கும் நாளது ஆவணி-மீ 11-உ ஞாயிற்றுக்கிழமையன்று பார்ப்பன புரோகிதமின்றி விவாஹம் நடைபெற்றது. ஷை விவாகத்தைமுன்னிட்டு சுயமரியாதைச் சூரியனும் "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபாய் 2. மணியார்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

T. V. சோமசுந்தரம் பிள்ளை B. A. B. L.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணமும் "குடிஅரசுக்கு" நன்கொடையும்.

நாகை வெளிப்பாளையம் ராம மடத்தெரு திரு எஸ். டி. துரைசாமி பிள்ளையவர்களின்குமாரன் திரு. சுப்மண்யனுக்கு பார்ப்பனப் புரோகிதமின்றி திரு ஞானசம்பந்த தேசிகரைக்கொண்டு 26-8-28 தேதி ஞாயிற்றுக்கிழமை திருமணம் நடத்தப்பெற்றது. அது போழ்து சுயமரியாதைச் சூரியன் "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபாய் 1-ம் "திராவிடன்" பத்திரிகைக்கு ரூபாய் 1-ம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. ஐயாக்கண்ணு.

## அநுதாபம்.

இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கையில், இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்த் தலைமைப் பண்டிதராயிருந்த கனவான் மு. ப. கணபதியா பிள்ளையவர்கள், சுமார் மூன்று வாரங்களுக்கு முன் காலஞ்சென்றார் என்று கேள்வியடைந்து பெரிதும் வருந்துகின்றேன்.

இவர் இலக்கண இலக்கியங்களில் முறையே பயின்று, நல்லுணர்வு கண்டவல்லுநர். காவினிக்கும் கனிமிகுந்த பாக்கள் பல நவின்றவர். ஆங்கில முங்கற்றவர் மந்த மதியினருக்கும் புலனும் வண்ணம், போதிக்கும் ஆசிரியர் இவரே யென்னத் தலைசிறந்து விளங்கியவர். நமது தமிழ்ச்சுவையின் உண்மையை தம் ஆராய்ச்சி வழியில் நன்குணர்ந்து, கற்றாரும் மற்றாரும் வியக்குமாறு எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றவர், அந்தோ!

பணபதியான், சேடனுயர், முடிப்பூவிற்,
புகழ்நாட்டிப் பாவலோர்கள்,
கணபதியாம், இவனென்னக், கூறிடவே
பற்பலபா, வாய்க்கச் சொற்ற,
... போம், என்னன்பன், புவிநீத்துப்,
புலவரூர், கனிவிற் சென்ற,
தெணபதியா, துளநடுக்கர், தாவயர்தேன்,
சுதியப்ப எளிதன் றம்மா.

எச். அழகிய மணவாளன். திருச்சி,

## புரோகிதப் போர்.

விபவ-ஹூ-ஆவணி-மீ 5உ அறுப்புகோட்டை சரகம் முத்துராமலிங்கபுரத்தில் நடந்த 7 மணங்களுக்கும் ஒருவனே புரோகிதனானதால் அவன் நேரத்தில் வரமுடியாது போகவே வேறு பார்ப்பான் மூலம் ஒரு மணம் நடந்து விட்டது. இதையறிந்த புரோகிதன், அப்பார்ப்பானை சினங் கொண்டு மையப் புடைத்து விடவே அவன் ஓவென்று கதறி ஊராரிடம் முறையிட்டுச் சென்றான். என்னே இப்புரோகிதனின் அக்கிரமம். என்னே இவ் அயோக்கியன்களைக் கட்டியழும் நம்மவரின் அறியாமை.

மு-ரா-லி-புரம்— ஞா-வா-சாலையார்.

## விளம்பரம்.

### இந்துஸ்தான் கோவாபரேட்டிவ் இன்சுரன்ஸ்சோசைட்டி லிமிடெட், கல்கத்தா.

கனவான்களும் மற்றுமுள்ள சாமான்ய ஜனங்களும் தங்கள் தங்கள் குடும்பத்துக்கு பாதுகாப்புச் செய்ய வேண்டியது அவசியம் ஆகவே குடும்ப நலத்தைக்கருதி உடனே மேல்கண்ட ஆபீசில் இன்சூர் செய்யுங்கள். 10 வருஷம் வாய்தா முதல் 30 வருஷ வாய்தாவரை வைத்துக் கொள்ளலாம். 19 வயது முதல் 45 வயதுவரைக்கும் இன்சூர் செய்ய லாயக்கான வயதாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. வருஷம் 1-க்கு 25 ரூபாயாக (வருஷம் இருமுறை 12—8—0 ஆக) 25 வருஷத்துக்கு செலுத்தி வந்தால் 25 வது வருஷத்தில் 1000 ரூ. கிடைக்கும். 1000 முதல் 10,000 வரைக்கும் இன்சூரன்ஸ் தொகையை அதிகப்படுத்தி ஒரு வருஷத்திற்கு ஏற்பட்ட தொகையின் வீதாசாரம் கட்டிக்கொள்ளலாம். இதன் மத்தியில் நாம் இறந்து போய் விட்டாலும் நாம் யாரை வார்சாகக் கோரினோமோ அவர்களுக்கு ரூ. 1000 முதல் 10,000 வரை கிடைக்கும்.

இந்த கம்பெனியானது நீடித்த காலமாயும் முக்கியமான டாக்டர் சி. எஸ். தாஸ் என்பவரை பிரசிடெண்டாகவும் இன்னும் அநேக கோடிக் கணக்கான தனமுடைய பிரமுகர்களை டைரக்டர்களாகவும் கொண்டதாய் ஏற்பட்டிருப்பதால் இந்தியாவில் இந்த கம்பெனி உயர்ந்ததாகும். இதுவரைக்கும் வாய்தா முடிந்தவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் 45 லட்சம் ரூபாய்வரை கொடுக்கப்பட்டிருப்பதுடன் இக்கம்பெனிக்கு இரண்டரைக்கோடி ரூபாய் மூலதனமும் இருக்கின்றது.

இதன் ஹெட் ஆபீஸ் கல்கட்டாவிலும், பிராஞ்சு ஆபீஸ் சென்னையிலும் இன்னும் அநேக இடங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த பக்கத்துக்கு தற்போது என்னை ஏஜண்டாக நியமித்திருக்கிறார்கள்.

என்னை, திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் இந்த ஏஜண்டு வேலையை ஒப்புக்கொள்ளும்படிக்கும், இந்த கம்பெனியின் தலைவர்கள் மிகவும் முக்கியஸ்தர்கள் என்றும், இந்த கம்பெனியானது மிக சிறந்ததென்றும் சொன்னதின் பேரில், நான் ஷை வேலையை ஒப்புக் கொண்டிருக்கிறேன். நான் தாலூகாபோர்டு மெம்பராகவும், பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டாகவும், டி. போர்டு ஸ்கூல் மானேஜிங் கமிட்டி மெம்பராகவும் இருந்து தற்பொழுது பெஞ்சு மாஜிஸ்டிரேட்டாகவும் இருக்கிறபடியால் நம்தென்னாட்டு மக்களின் க்ஷேமத்தைக் கருதி இந்த வேலையை ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதில் அங்கத்தினராகச் சேர விரும்புவோர் மற்ற விபரங்களுக்கு அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதினால் பதில் அளிக்கப்படும்.

ஈ. வெ. கரிய நாயுடு,
ஏஜண்டு,
c/o "குடி அரசு" ஆபீஸ்,
ஈரோடு.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

ணம் எனப்பெயரிய பாழானகலியாணத்தை அரசர்க்கும் மக்களுக்கும் ஏற்படுத்தினர். அது "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பியத்திலுள்ள கற்பியல் சூத்திரத்தால் பெறப்படும். இந்தப் பாணிக்கரணத்தை வேந்தர்க்கும் மக்களுக்கும் விதித்து தங்கள் சமூகத்தினர் அரசர்மக்கள் இவர்களுடைய அரும்பெரும் பொருள்களைக் கவர்ந்துண்ண வழி தேடினர். இக்கலியாணம் ஒருபெண்ணையொருவன் வேள்விச் சடங்கொடு கூட பெண்ணின்பெற்றோர் கொடுப்பக்கொள்ளுதல். இதுதான் பார்ப்பான்காலில்விழுந்து தமிழ்மக்கள் தங்கள் மானத்தைக்கெடுத்துக்கொள்ளும் கலியாணம். இது தொலைக. சுயமரியாதைமணம் ஓங்குக. பார்ப்பனீயம் வீழ்க. வைக்கம் வீரர்வாழ்க. சுயமரியாதை ஓங்குக. பழங்கற்கருவிக காலத்திலும் புதுக்கற்கருவிகாலத்திலும் தமிழ்மக்கள் இயற்றிவந்தது சுயமரியாதை மணமே. அது ஓங்குக. தொடரும்.

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கு.

திருக்கோவிலூர் தாலூக்கா அருங்குறுக்கை வெ. ரங்கசாமிநாயுடு தமக்கு பெண் குழந்தை பிறந்ததை முன்னிட்டு பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து விபவ வருஷம் ஆடி மாதம் 16 தேதி சில ஏழைகளுக்கும் பந்து மித்திரர்களுக்கும் உணவளித்தார்.

அ. தி. கங்காதரம் பிள்ளை.

## சகலமேக சஞ்சீவி.

தங்கம் சேர்ந்தது. அநேக மெடல்கள், பரிசுகள், பத்திரங்கள் பெற்றது. பல ரோகங்களாலுண்டான வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், நீரழிவு, கண்டமாலை, சூலைநீர், பற்றுவரள், கிரந்தி, கட்டிகள், கருமேகம், வெண்மேகம், ஆராதரணம், புகது, பீநசம், கபாலநீர், இளைப்பு, காசம், குன்மம், குதகம், கண் வியாதிகள், வாதநீர்கள் முதலியன 7 நாள் மருந்தில் நிச்சயமாகக் குணமாகும். அனுபவத்தில் கண்கண்டது. புட்டி 1-க்கு ரூ. 5—0—0.

கல்நார் பற்பொடி டஜன் 1-க்கு ரூ. 2½.

## சி. எம். சாமி,

நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2. 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0 நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு, ஹெட்னர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

"ஆனந்தகுணபோதினி"

ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

## அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதினியில் இதுபோன்ற புதுதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை போன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜகவினோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எங்குமே கிடையாது. இதை யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி இராஜகோபால் முதலியார்
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கஷ்டப்படுகிறீர்கள்?
இதை—சாதனை செய்.

சுவாசகாச ரோகத்திற்கு அபூர்வ சிகிச்சை

## ஆஸ்த்மா பௌடர்

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீசளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்காசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருந்தவிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.


## கடவுளை வணங்க

## பார்ப்பனத் தரகர் வேண்டுமோ?

௪-ம பக்கத் தொடர்ச்சி.

து ஊர் எத்தனை தூரம்" என்று கேட்டான். அதற்கு "அய்யா எங்கள் வயதிற்கும் எங்கள் விளையாட்டிற்கும் எங்கள் ஊர் எத்தனை தூரமிருக்குமென்பது உங்கள் படிப்பு ஆராய்ச்சியின் கணக்கில் கண்டு பிடிக்க முடியவில்லையா" என்றன குழந்தைகள். உடனே வித்வானுக்கு உணர்ச்சிவந்து ஊரை நோக்கிப்போனான் என்பதுபோல பண்டிதர்கள் "குடி அரசை" பார்த்தவர்கால் தானாகவே விவசார உணர்ச்சி உண்டாகும்.

எங்கள் ஆராய்ச்சியை வாரம் ஒருதரம் "குடி அரசு" தமிழ் உலகத்திற்குச் சொல்லுகிறது. அதன் பத்திராதிபரும் அதைச்சேர்ந்தவர்களும் ஊர் ஊராய் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த "திருஞானசம்பந்தர் கடவுளைக் கண்டாரா? ஞானப்பாலுண்டாரா?" என்று நாங்கள் பண்டிதர்களைகேட்டதுமில்லை, கேட்கவேண்டிய அவசியமுமில்லை. எங்களுக்கு அதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஏனெனில் ஒவ்வொரு மூன்று மாதத்துக் குழந்தையும் தூக்கத்தில் தானாகவே சிரிக்கும், அப்போது பக்கத்திலிருப்பவர்கள், கடவுளைக்கண்டு சிரிக்கிறதென்றும் பூர்வீகத்தைப்பற்றி சந்தோஷப்படுகிறதென்றும் சொல்லுவதையும் கேட்டிருக்கிறோம். மூன்றரைக்கோடி பிரமாக்களைப் பார்த்த ரோமரிஷியும் எட்டு ரோமரிஷிகளைக்கண்ட அஷ்டகோணமகாரிஷியும், புசுண்டமகாரிஷியைப் பார்க்கப் போன ராமரையும் வசிஷ்டரையும் பார்த்த நீங்கள் எத்தனையதூரமரும் வசிஷ்டரும் என்னசேட்ட புசுண்டமகாரிஷியும் அவர்களுக்கு முன்னும் பின்னுமிருந்த ரிஷிகளும் அவதாரங்களும் ஆச்சாரிகளும் கடவுளைக்கண்டது மன்னியில், மாமனாகவும், மகனாகவும், மகனாகவும், மருமகனாகவும், மருத்துவச்சியாகவும், மலையாகவும், வேங்கைமரமாகவும், மந்திரியாகவும், மங்கையாகவும், மன்னனாகவும், மண்சுமப்பவனாகவும் இன்னும் அநேகமாகவும் பக்தகோடிகளும் கடவுளைக் கண்டிருப்பதாக இந்துவேதங்களும் சாஸ்திரங்களும் புராணங்களும் சொல்லுகையில் திருஞானசம்பந்தர் கடவுளைக் கண்டாரா இல்லையா என்பதில் மாத்திரம் எங்களுக்கு என்ன ஆச்சரியம். எத்தனையோ பூசாரி உடுக்கைக்குள்ளிருந்து சுவாமி பேசுகிறதும், எத்தனையோ குருக்கள் தட்டிலிருந்து சுவாமி வரம்கொடுக்கிறதும், எத்தனை பேருக்கோ சுவாமி சொப்பனம் சாதிக்கிறதும் திருப்பதியில் வருடம் ஒருதரம் பாப்பாரபையனாக சுவாமிவந்து எல்லாரிடமும் பேசி காணிக்கை வாவிற்கு பக்குவம் செய்து அங்கிருக்கும் பூசாரியின் வரும்படிக்கு ஏற்பாடுசெய்து விட்டுப்போகிறதும். பாலும் பன்னீரும் தான் குடித்ததுபோக மீந்ததை தேவடியாள் வீட்டுக்கு பங்குபோட்டுக் கொடுக்க பால்காவடியும் பன்னீர்க்காவடியும் கட்டிவரும்படியாய் உத்திரவு போடுவதும், புதுச்சாமி குடிவரக் கும்பாபிஷேகம் செய்கையில் கும்பக்குடத்துக்குள் சுவாமி புகுந்துகொண்டு கும்பத்தை குருக்கள்தலையில் படாதபாடுபட்டு பத்துபேர் தூக்கிவைக்க குருக்களை பத்துபேர் பிடித்தாலும் அவன் துள்ளிக்குதித்து பத்து மனுவுக் கனமபோல தலையைக்காட்டி பல்லைக்கடித்து கண்ணை இறுகமூடி கழுத்திற்கு மூச்சைப்பிடித்து அடி எடுத்துவைக்க அசையாக்காலாகக்காட்டி அக்காலுக்குப்பூவும் தண்ணீரும்தெளித்து அதற்குப் பின் நகர்ந்து குடத்திலிருந்து கோவிலுக்குள் சுவாமிவாழ்வதையும் கும்பாபிஷேகத்தின் பலனாக அன்றே அந்த ஊரில் விஷசுரமும் வாந்திபேதியும் தாண்டவமாடுவதும், கும்பாபிஷேகம் செய்த நாட்டுக்கோட்டை செட்டியார்கள் வைத்திருக்கும் வட்டிக் கடைகளின் பெருமையில் அந்த எல்லையைச்சுற்றி சிவில் வாரண்டுகள் சர்வ சாதாரணமாய் உலவுவதும், பார்த்த எங்களுக்கு திருஞானசம்பந்தர் கடவுளைக்கண்டாரா, பேசினாரா? என்பதில் என்ன அதிசயமிருக்கிறது. ஆனால் இத்தனை தாராளத்துடன் இவ்வுலகில் விளையாடும்கடவுள்கள் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்று (நம்கொடுமையால்) கருதப்படுகிறவர்களில் யாரேனு மொருவர் அக்கடவுளின் சந்நிதானத்திற்கு வந்தால் அவர்வன் அவிடம்விட்டு ஓடிப் போகிறார் என்பதுதான்வங்களுக்கு ஆச்சர்யமாகவிருக்கிறது. இந்த ஆச்சர்யத்தைப்பற்றிக்கேட்டால், இப்பண்டிதர்கண்களுக்கு நாங்கள் படிப்பில்லாதவர்களாகவும் ஆராய்ச்சி இல்லாதவர்களாகவும் வெட்டப்படவேண்டியவர்களாகவும் குத்தப்படவேண்டியவர்களாகவும் ஏழைகளையும் பாமரமக்களையும் பாழாக்குபவர்களாகவும் எப்படி ஆவோம் என்பதும் ஆச்சர்யமாக இருக்கிறது.


கிலிட்டு நகை அசல் தங்க நகை யாகுமா?

அதுபோல

சந்துகள்தோறும் ஷண்முகம்

என்னும் பெயரால் பொடிக் கம்பெனிகள் இருப்பினும்

## றெட்டூர் - ஷண்முகம்

## பொடிக் களஞ்சியம் ஆகுமா?

ஐம்பது வருஷங்களாகப் புகையிலை தோட்டமும் பொடியின் கை பாகமும், செய் பாகமும் உள்ளபடி அறிந்தவரும் ஆதி புருஷர் றெட்டூர் ஷண்முக முதலியாருடைய குமாரருமாகிய றெட்டூர் காசி விஸ்வநாத முதலியார் நேரில் நடத்திவரும் பொடிக் களஞ்சியம் சிரேஷ்டமா? அல்லது அவருடைய பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு அவருடைய சம்பந்தம்யாதுமில்லாத பொடிக் கம்பெனிகள் சிரேஷ்டமா?

### அன்றியும்

றெட்டூர் காசி விஸ்வநாத முதலியாருக்குச் சொந்தமாய்ப் பெரிய புகையிலை மண்டி யிருப்பதால் உயர்ந்த தினுசுப் புகையிலையைப் பொறுக்கி எடுத்துப் பழுதான இலைகளை அடியோடே நீக்கி நல்ல சரக்கைக் கொண்டே பொடி செய்ய அவருக்குச் சாத்தியப்படும். அப்போதைக் கப்போது சில்லரையில் புகையிலை வாங்கிப் பொடி செய்பவர்கள் அவரைப்போல் உயர்தரப் பொடி செய்வதற்கு எங்கே போவார்கள். ஆகையால் அறிவாளிகள் கிலிட்டுப் பேரினால் மோசம் போகாமல் அசல் றெட்டூர் ஷண்முகம் பொடியை அடியிற் கண்ட கம்பெனியில் வாங்கி அனுபவிப்பார்கள் என்பது எமது பிரார்த்தனை.

குறிப்பு:— தபால் பெட்டி 140 ஷண்முகம் பொடிக் கடை லிமிடெட் கம்பெனியிலிருந்து நான் விலகி விட்டேன்.

எமது பொடிக்கு ஏஜென்ஸி வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

றெட்டூர் - காசி விஸ்வநாத முதலியார்,
றெட்டூர் ஷண்முகம் பொடிக் களஞ்சியம்,
தபால் பெட்டி 156, சென்னை.



## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—0—0 தான்.

இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளி வரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட ரூ 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

**மாதிரி காபி இனும்.**

**ஆனந்த விகடன் ஆபீஸ்,**
**244. தங்கசாலை வீதி, மதராஸ்.**

தந்தி விலாசம்:—"விகடன்". டெலிபோன் நெ. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனுமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனல் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

**PHOTO HAND CAMERA**



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

கண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூருகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

## அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்,

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரங்குள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினுல் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

**110** சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; சௌகரியமான முகம் பார்க்கும் கண்ணுடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12: மணிபர்ஸ் 1. ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 24 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி.
புதுச்சேரி.

# ஹிப்னடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமானால்,
சுய மரியாதைப் பெற வேண்டுமானால்,

# ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

என்னும் மனோ வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.

---

## இதிலடங்கிய விஷயங்கள் :—

I முதற் பாகம் :—(11 பாடங்கள்)

முன்னுரை.

1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பற்றி
3 தன்னாட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகசியம்
7 பிராணயாமம் (படங்களுடன்.)
8 வியாகூலமும், வீண்திகிலும்
9 அயர்ந்த நித்திரை
10 மன வோர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)

1 தெலிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றாவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவது அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றாம் பாகம் :—(12-பாடங்கள்.)

1 கோரிய பெண்ணை மண முடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய ஊடலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பதமற்ற குழந்தையைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மகிழ்ச்சியில்லா மணத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.

மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை

மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்

அல்லது

சில அபூர்வ மர்மங்கள்

பிராணயாமத்தால் வசீகர வசியம் பெறுவ தெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்ப தெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வ தெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவ தெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பாற் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபதசையை வளர்ப்ப தெப்படி?

கண் பார்வையையும், கறு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக்கொள்வ தெப்படி?

பிராணயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வ தெப்படி?

இருவித ஆன்மப் பயற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்ப தெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வ தெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாராமல் தடுப்ப தெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வ தெப்படி?

மரண காலத்தில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்துக்குப் பின் மக மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவ தெப்படி?

சாதாரணப் பிராணயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வ தெப்படி?

மனோ சக்தியை அபிவிருத்தி செய்து கொள்வ தெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவ தெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவ தெப்படி?

வில்வ வேரின் விநோதங்களென்ன?

புளி யேப்பத்தைத் தடுப்ப தெப்படி?

துளசியின் மகிமை என்ன?

நாயுருவியின் அதிசயம் யாது?

லவணத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விடுகதைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை நம் ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கண் விலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

---

இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.

எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும்

ஒரே முறையில் 2 பிரதி வாங்குவோர்க்கு தபால் சார்ஜ் இனம்

**மனோஹரம் கம்பெனி, தபால்பெட்டி 248, சென்னை.**


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.